ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

துரோபதைகுறம்.

இஃது

திருவாலங்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியாரது

சென்னை.

பூமகள்விலாச அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

MADRAS.

1902

நெ. 21. திருப்பளிதெருவுபெத்துநாய்க்கன்பேட்டை

உ

கடவுள்துணை.

கேட்லாக்கிலுள்ள சாமான்களின்

விளம்பரம்.

அருந்தமிழறிந்த அன்பர்களே ! சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை திருப்பளிவீதி 21-வது நெம்பருடைய பூமகள்விலாச அச்சுயந்திரசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்குமுதலிய புஸ்தகங்களும் ஸ்மார்த்தவைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பால்யர்களுக்கு வேண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டு புஸ்தகங்களும், இசுலமானவர்களுக்கு வேண்டும் தமிழ் எழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலா, நாவலர் யாவருக்கும் வேண்டும இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை- அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசுகளும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் ஊ-புஷ்பரதசெட்டியர் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த வுயர்ந்தபுஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தக்க அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத் தக்கதாய் வெகு அழகான் வேலைசெய்த றப்பர் சீல்களும், ஜெர்மன் சில்வராலும் எலெக்டிர்க்தங்கத்தாலும் செய்த நகைகளும், சாமான்களும் நல்ல வாசனைபொருந்தியதாயும் நாள்படயிருங்கால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர் தினுசுகளும், பூசுபில்லைகளும், வாசனை வத்திகளும் இவைகளெல்லாம் தயாராயிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல்விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூடும். என்னுடைய கேட்லாக் வேணடுமானவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் இலவசமாய் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந் தெரியும்படி தெளிவாய் ஒவ்வொரு முறையிலும் தங்கள்பெயர் ஊர், இருப்பிடம், போஸ்டாபீஸ் தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தை கட்டாய மெழுதவேண்டும்.

பூமகள்விலாச அச்சுயந்திரசாலைத்தலைவர்
சௌகார்பேட்போஸ்டு மதராஸ்.
அ-இரங்கசாமிமுதலியார்.

உ

கடவுள் துணை.

துரோபதைகுறம்.

விருத்தம்.

திருத்தியகுழற்பாஞ்சாலி செல்வத்துரோபதையயார்மங்கை
பெருந்திருவாள்தன்பக்கல் பேசியகுறத்தைப்பாட
பொருந்தியதெய்வச்செம்பொற் பொன்மலைவாழுங்கங்கை
தருந்தியமுகமனைத்தும் தகமது துதிசெய்வீரே,

ஆதியேயரியேபோற்றி அச்சுதாபோற்றிபோற்றி
சோதியேசுடரேபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நாதனேவள்ளிபங்கா நாரணன்மருகாபோற்றி
காதலாய்குறத்தைப்பாட கந்தனேயருள்செய்வாயே,

பஞ்சபாண்டவர்கள்தேவி பாஞ்சாலிபாவைதானும்
வஞ்சகன்திரியனாலே வனவாசம்பன்னிரண்டும்
தஞ்சமாய்கழிந்தபின்பு தானுமேவிலாடதேசம்
வஞ்சியுமன்னர்கூட வந்துமேதோன்றினாரே

பரமசிவம்,

மஞ்சுலாவுபாஞ் சாலநன்மாநகர்
விஞ்சுதுரோபதை மேசுறுநற்குற
வஞ்சிமாலை வழுத்தவேதிங்களார்
செஞ்சடிலன திருவடிவாழ்த்துவாம்,

விநாயகர்

பொன்னுமாமணிப் பூங்கழற்பொற்பினு
டின்னுபாஞ்சாலி வஞ்சிக்குறஞ்சொல்லப்
பன்னுதும்பையும் கொன்றைப்பணிமதி
மின்னுவேழ முகவனைவேண்டுவாம்,

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,

திங்களறுகரவணியுஞ் சடையிலக்குபொன்முடியுஞ்
செயித்தீர்தன்மா
தங்கவதனந்தய்ங்க நான்மறையுஞ்சயசயவென்
றேத்திப்போற்றப்
பொங்குமுடனின்றநல்லோய் தமியனுக்கிந்நூற்குமனம்
புளகம்பூப்ப
பங்கமறவென்னாவி லிருந்துபொருண்மறுதமருள்
பாலிப்பாயே

வேறு,

திருந்தியபொழில்பாஞ்சாலி சீர்கதைதமிழிற்பாட
பெர்ருந்திருவாளைப்பாரதம் பெட்புடனவணங்கியேத்தி
பொருந்தியதூறுவண்ணம் புகல்குறவஞ்சியாக
வருந்தியேயிந்தக்கதை வளம்பெறப்பாடுவாமால்

காப்பு,

வெண்செந்துறை-விநாயகர்துதி

விக்கினவிநாயகரே வேலவரேமுன்னடவும்
சத்திவிநாயகரே சரிந்தவயிற்றோனே
அந்திபகலுமுமை அன்பாகநான்மறவேன்
முந்திமுந்திஎந்தனுக்கு முன்னடக்கவேண்டுமையா
ஒருகையில்மோதகமும் ஒருகையில்செங்கரும்பும்
ஒருகையில்தேங்காயும் ஒருகையில்நற்கரும்பும்
இத்தனைபெற்றுமல்லோ இருந்தீர்மரத்தடியில்
உம்மைகண்டுபரமசிவன் கருத்தில்நினைவாகி
விக்கினரும்வேலவரும் இருவரும்வாருமென்றார்
அந்தவுரைகேட்டு அடிதொழுதீர்இருவர்களும்
பரமசிவன்பார்த்துப் பர்வதியைக்கண்காட்டி
பிள்ளைகளைத்தான்பார்த்து பூரிப்பாயேதுசொல்வார்
ஈரேழுலகமெல்லாம் இருவருஞ்சுற்றிவந்தால்
முந்திவந்துநின்றவர்க்கு இந்தக்கனிதருவேன்
என்றவுரைகேட்டு எழுந்தாரேவேலவரும்

பச்சைமயிலேறிப் பாரெல்லாஞ்சுற்றிப்போனர்
அப்போதுநீரெழுந்து அயனரைசுற்றிவந்தீர்
ஈரேழுலகமெல்லாம் யிவர்தானேதெய்வமென்று
சுத்திவந்தபாவனையை மெத்தெனவேதானறிந்து
சந்தோஷப்பட்டுமல்லோ கொடுத்தார்கனியுமக்கு
கானமயிலேறிக் கடலேழுலகமெல்லாம்
எல்லையெல்லாஞ்சுற்றிவந்து யேமார்ந்தார்வேலவரும்
கர்த்தருடையகைதனிலே கனிபெற்றுவந்தவரே
கனிபெற்றுவந்தவரே காருமையாவிக்கினரே
துரோபதையாள்குறத்தை தொல்லுலகில்யான்பாட
பாஞ்சாலிதன்குறத்தை பார்தனிலேயான்பாட
பாடவருள்புரியும் பார்வதியாள்புத்திரரே
சொல்லவருள்புரியும் சிவசங்கரனர்புத்திரனே
அருள்புரியவேண்டுமையா ஆண்டவனேயெந்தனுக்கு

முருகர் துதி.

ஆறுமுகம்படைத்த அரனர்திருமகனே
சரவணப்பொய்கைதனில் வந்துதித்தசண்முகனே
அசுரருடல்பிளக்க அவதாரமானவரே
கானமயிலேறும் கர்த்தரிடபுத்திரரோ
பச்சைமயிலேறும் பார்வதியாள்புத்திரரோ
புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளிமணவாளா வந்தெனையாளுமையா
அக்கினியில்வந்துதித்த ஆரணக்குதுரோபதையாள்
ஐவர்பஞ்சபாண்டவற்கு அபிஷேகபத்தினியாள்
பத்தினியாள்தன்குறத்தை பாருலகில்பாடுதற்கு
கர்த்தரிடபுத்திரரே கடுகவந்துகாருமையா
கதைகளதுதப்பாமல் காருமையாவேல்முருகா
பாட்டுதவறுமல் பட்சமுடன்வந்தருளும்
வாக்குதவறுமல் வர்னமுகம்பாரும்

சரஸ்வதியம்மன் துதி.

வாரகவதாரங்கொண்ட மகாவிஷ்ணுதன்னுடைய
நாபிக்கமலந்தன்னில் வந்துதித்தநான்முகனர்

நாவிலிருப்பவளே நற்கருத்தையுண்டுபண்ணும்
மாயன்மருமகளே வந்தெனக்குமுன்னடவும்
தாயேசரஸ்வதியே சங்கரியேமுன்னடவும்
பஞ்சவர்கள்பத்தினியாள் பாவைகுறமுரைக்க
வஞ்சனைகளில்லாமல் வந்தெனக்குமுன்னடவும்
சொல்லுந்தவறுமல் சொற்குற்றம்வாராமல்
ஏடுதவறுமல் யெழுத்தாணிசாயாமல்
நாவுதவறுமல் நடத்துமம்மாயிக்கதையை
தப்பிதங்கள்வாராமல் சங்கரியேமுன்னடவாய்
குற்றங்கள்வாராமல் கொம்பனையேகாருமம்மா
கார்க்கக்கடனுனக்கு கர்த்தரிடதேவியரே
பாடவெனக்கருளும் பாரளந்தான்மருமகளே
சொல்லவருள்புரியும் சுந்தரியேயெந்தனுக்கு
கடல்வண்ணன்மருமகளே கைதொழுதுபாடுகிறேன்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

கதையின் வரலாறு.

(*)

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
இந்திரபுரிபட்டணத்தை யிருந்தரசுஆளுகையில்.
பட்டணத்தையாளுகின்ற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்க ளரசாளுநாளையிலே
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்தாயாரும்
தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அர்ச்சுனனுர்தேவியர்கள் அனைவருமொன்ருக
எல்லவருமொன்ருக யிருந்தரசுயாளுகையில்
அத்திபுரமாளும் அரவக்கொடியோனும்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்தம்பிகளும்
கர்ணன்சகுனியும காங்கேயருள்ளவரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளமற்றவரும்
பாட்டனுர்வீஷ்டுமரும் பாரியதுரோணருமாய்
எல்லவருமாக யெல்லையுலகாளுகையில்
அத்திபுரமாளு மரவக்கொடியோனும்
அம்பலத்துவாசலிலே அனைவருக்குமேதுசொல்வான்
என்-பங்காளிபஞ்சவர்கள் பாருலகமாளுகிருர்
ஐவரையும்நான்துரத்தி ஆளவேண்டுமசீமையெல்லாம்
இப்படிக்குசொல்லியல்லோ யெழுதினுனேலையொன்று
விதுரனைப்போகவிட்டு ஐவரையுந்தானழைத்து
மாயத்தால்சூதாடி மண்ணுறுகமண்பறித்து
மன்னர்சபைநடுவே மாதைதுகிலுரிந்து
கொற்றவர்கள்தன்சபையில் கோதைதுகிலுரிந்து
பண்ணுதகோலமெல்லாம் பண்ணியந்தபஞ்சவரை
காட்டாதகோலமெல்லாம் காட்டியந்தபஞ்சவரை
பன்னிரண்டுதன்வருஷம் பாரவனவாசஞ்செய்து
பதின்மூன்றுதன்வருஷம் அக்கியாதவாசஞ்செய்து
உருவந்தெரியாமல் வொளித்துமிகத்தானிருந்து
பதினுலாந்தன்வருஷம் பிறந்தபிறகாக

பதினெட்டாநாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே
ஆடிப்பறக்கும் அடர்ந்தசமர்க்களத்தில்
எங்கள்முடிகளெல்லா மிறக்கும்படிபடித்து
வண்ணமுடிசிந்திநாங்கள் மாண்டபிறகாக
வந்துமேநீங்களெல்லாம் வாழுமரசாண்டு
என்றுமவனுரைத்தா னெரிநாகங்கொண்டவனும்
அந்தவுரைகேட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரு மாரணங்குதுரோபதையும்
அப்படியேநல்லதென்று ஆரணியம்போய்நடந்தார்
வனமாவனந்தாண்டி வந்தாரிநண்டவனம்
அந்தவனந்தனிலே ஆணழகர்பஞ்சவர்கள்
பரணசாலையுண்டுபண்ணி பஞ்சவர்கள்தானிருந்தார்
பண்ணையதுகலவைப் பரட்டைப்புளிகரணை
தும்பைபுளிகருணை தூதுவளைமுள்கீரை
கிள்ளிசமைத்துமவர் காலங்கழித்தார்கள்
இப்படியாயங்கே யிருந்தார்சிலகாலம்
மற்றுஞ் சிலகாலஞ்சென்றபிறகாக
தருமரிஷிநாவாலே நால்வருந்தான்மாண்டார்
தருமரவர்பார்த்து தான்புலம்பும்வேளையிலே
நாராயணர்வந்து யெழுப்பினார் நால்வரையும்
ஆயிரடபுண்ணியத்தா லங்கேபிழைத்தார்கள்
மற்றுமொருவனத்தில் வந்துமவர்வாசம்பண்ணூர்
அங்கேயும்பட்ட அவதிகள்மெத்தவுண்டு
பத்துவருஷமுமே பட்டார்வெகுபாடு
பத்தாம்வருத்திலே பாஞ்சாலியேதுசொல்வாள்
ஐவரையுந்தெண்டனிட்டு ஆரணங்குகேட்கலுற்றாள்
ஐவர்களுநங்களுங்கள் அடியேனொருவார்த்தை
அத்திபுரமல்லோ அரவக்கொடியேனும்
சீமையும்பூமியுந் தேசத்தில்நெல்விளையும்
எப்படிக்கிருக்குதென்று நான்பார்த்துவாரேனையா
போகவிடைதாருமென்று வுத்தமியாள்கேட்கலுமே
தககப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
ஐவருக்குந்தேவியரே ஆரணங்குநீர்கேளும்
டங்காளிவாசலுக்கு நீபோகநீதியுண்டோ
தாயாதிவாசலுக்குத் தனியாகப்போகலாமோ

போனவிடந்தனிலே பொல்லாங்குதானடந்தால்
வந்துஎமக்குரைப்பார் யார்காணும்மங்கையரே
சொல்லுநீதுரோபதையே யென்றுமவர்கேட்க
அப்போதுதுரோபதையா ளாரணங்குயேதுசொல்வாள்
இவ்வேஷமாகவேநான் போவேனேமன்னர்களே
கொச்சைக்குறத்தியைப்போல் போவேனேமன்னர்களே
மலைக்குறத்தியைப்போலாகநான் வடிவெடுத்துபோனாலே
அத்திப்புரந்தனிலெனக்கு அவகேடுவந்தாலே
ஆலிலைமேல்பள்ளிகொண்ட மாயர்துணையாவார்
மச்சவதாரங்கொண்ட மாயர்துணையாவார்
கூர்மாவதாரங்கொண்ட கோபாலர்காத்திடுவார்
வராகவவதாரங்கொண்ட வைகுந்தர்காத்திடுவார்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டாள்
ஆனலழகுமன்னர் ஐவர்களுந்தான்பார்த்து
ஆரணங்குதுரோபதைக்கு ஐவருந்தாமுரைப்பார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தபைங்கிளியே
உந்தன்மனதுபடி உத்தமியேசெய்யுமென்றார்
உன்சித்தத்துக்கேற்றபடி செய்யுமென்றார்பஞ்சவர்கள்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையாள்
அருச்சுனராசாவை ஆரணங்குகானழைத்து
இருவருமாகவல்லோ இளந்தோப்பில்வந்தார்கள்
உருத்திசாட்சமரத்தடியில் உட்கார்ந்திருவருமாய்
தோராவடிவழகி துரோபதையாள்கூந்தலதை
அருச்சுனராசரவர் அவர்கையில்தான்கோசி
சீவிசிணுக்கறுத்து சிமிழ்போலக்கொண்டையிட்டு
வாரியகூந்தலதை வண்ணமுடிகொண்டையிட்டு
கொண்டைக்கழகாகக் குச்சிமிகச்சொருகி
வகையாயிரம்பெற்ற வான்சவரியுட்சொருகி
ஆயிரம்பொன்பெற்ற அணிசவரியுட்சொருகி
கொண்டையின்மேல்பூவும் குடமல்லிதான்முடித்து
மல்லிகைமுல்லையும் மருக்கொழுந்துதான்முடித்து
ஆணழகிகண்களுக்கு அஞ்சனமையெழுதி
மகலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
சீரானநெற்றியிலே திலதமிகவணிந்து

காதுக்கழகாக கம்மலதுசோடித்து
தந்தத்தால்கம்மலது தையலர்க்குகாதிலிட்டார்
பக்கத்தில்ஒன்னப்பூவும் பச்சைக்கல்நல்முருவும்
கொப்புமயிர்மாட்டி கோதையர்க்குத்தானணிந்தார்
ஒண்டிபச்சைதொங்கவிட்டு வொருகல்புதைத்திருக்க

முகத்துக்கழகாக மூக்குத்திதானணிந்தாள்
மாருக்கழகாக பார்பதக்கம்தாவடங்கள்
பலகாரைக்கோர்த்ததொரு பருத்தநல்லதாவடங்கள்
அழகுப்பலகாரை அழகானத்தாவடமாம்
கொத்துப்பலகாரை கோர்வைமணித்தாவடமாம்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பலவகையானமணி
உட்கழுத்தில்கொஞ்சுமணி தரித்தாளேயுத்தமியாள்
கைகட்டுஞ்சரிவளையல் கைநிறையக்குறவளையல்
முன்கைமுழங்கை நிறைக்ககுறவளையல்
அஞ்சுவிரலுக்கும் அழகானமோதிரங்கள்
குறவரிடமோதிரங்கள் தரித்தாளேகொம்பனையாள்
கறுப்புநல்லதட்டிசேலை கட்டினாள்துரோபதையும்
குறத்திவடிவானாள் கொம்பனையாளப்போது
ஆணழகுமன்னர் அருச்சுனரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
கொம்பனையேயுந்தனுக்கு குறக்கூடைவேண்டுமல்லோ
கோபாலரைநினைந்தால் வாருமென்றார்கூடையது
அப்போதுதுரோபதையாள் ஆபரைக்கைதொழுதாள்

குறம்,

துரோபதை மாயவரைக்கூடைகேட்டது,

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தின்னா
தென்னாதி நாதந்தினா தினதெந்தினா தின்னா
மகாதேவர்க்குமைத்துனரே மாயவரேசுவாமிஐயா
வைகுந்தவாசகரே வந்தெனக்கு அருளும்
அண்டமளந்தவரே ஆனந்தரூபசாமி

ஆதிநாராயணரே வரந்தருளவேண்டும்
நரசிம்மவவதாரங்கொண்ட ராமபத்திரசுவாமி
இலட்சுமிக்கும்மணவாளா யெனக்குவரந்தருளும்
இரணியனைமார்பிளந்து வகுந்துதிரங்குடித்தீர்
ஈரேழுலகமெல்லாம் நிறைந்தவரேவாரும்
இராவணனையுடல்பிளந்து சீதைசிறைமீட்டீர்சுவாமி
நலமானவிபீஷ‍க்கு பட்டமதுதந்தீர்
அன்றொருநான்திரியோதிரன் சபைதனிலேநாணும்
அலருமபோதெந்தனுக்கு துகிலாடைதந்தீர்
இன்றொருநாளெந்தனுக்கு வந்துமிகவருளி
இசைவானகுறக்கூடை யெனக்குத்தரவேண்டும்
நினைத்தகுறிநானுரைக்க நல்லசெம்பொன்கூடைநல்ல
நீலவர்ணமாயவரே எனக்குத்தரவேணும்
அவரவர்கள்நினைத்தகுறி நானறிந்துசொல்ல
அழகானகுறக்கூடை தந்தருளவேண்டும்
ஆறுமுகம்படைத்ததோர் வேலரேமுருகாசுவாமி
அம்மைவள்ளிகுறக்கூடை எனக்குத்தரவேண்டும்
தேவேந்திரனார்மகனை மணம்புரிந்தவேலா
தெய்வானைகுறக்கூடை தந்தருளுஞ்சுவாமி
குறவரிடபெண்கொண்ட் குமரேசாமுருகேசா
மறவரிடபெண்கொண்ட மாயவனார்முருகாஐயா
மாதுவல்லிகுறக்கூடை எனக்குத்தரவேண்டும்
அக்கினியிலவந்துதித்த ஐவருக்குந்தேவியவள்
ஆயரையும்வேலரையும் கைதொழுதுநின்றாள்
ஏழுலகமளந்தவரும் ஈஸ்பரனார்மகனுமங்கே
இவர்களுமனமிறங்கி கூடைதனையனுப்ப
வச்சிரத்தாலமாணிக்கத்தால் வாறுகட்டுங்கூடையது
வைடூரியமாகதத்தால் வறம்புகட்டுங்கூடை
முத்துரத்தினபச்சைகளால் முழுதுகட்டுங்கூடையது
முழுநீலமாணிக்கத்தாள் அணிகள்கட்டுங்கூடை
கனத்தநல்லகுறிசொல்லுங் காட்டிதருங்கூடையது
கைலாசஈஸ்வரனார் காட்சிபெருங்கூடை
இத்தனைக்குநலமான கூடைதனையெடுத்துஅவர்
எகறவிட்டார் பாஞ்சாலி கையில்விழவென்று
அந்தநல்லகூடையது ஆகாயஞ்சுத்திஅது
ஆணழகிகைதனிலே வந்துவிழுந்ததுவே

வேறு,

ஆதிநாரயணரை அடிவணங்கிதெண்டனிட்டு
திருத்தணி கைவேலவரைத் தீர்க்கநமஸ்கரித்து

கூடையதுவாங்கி கொம்பனையாளப்போது
வச்ரமணிகூடைக்குள்ளே வைத்தாள்பலவகைகள்
மருந்துவகைகளிலே மலைவேப்பன்கொட்டைவைத்தாள்
புலியினதுநகமும் புகழானவேர்வகையும்
நரிப்பல்நரிமுகமும் நல்லமருந்துகளும
ஆண்வசியம்பெண்வசியம் ஆனமருந்துகளும்
முதுமையுள்ளஆண்பெண்ணுக்கு யிளமைவரமருந்துகளும்
முகங்கொண்டசன்னிதீர மூலைமலவேப்பமவேர்
பல்நோவுதந்தவாய்வும் தீரமருந்துவகை
மார்நோவும்பித்தவாய்வும் மாளநல்லவேர்வகைகள்
வயிற்றுவலிதனக்கு ஏற்றமருந்துவைத்தாள்
கால்வலிகைவலிக்கு கனத்தமருந்துவைத்தாள்
பட்டோலைதன்னாலே முடைந்தகிலுகிலுப்பை
ஈச்சங்குருத்தோலை யிசைந்தகிலுகிலுப்பை
தாழங்குருத்தோலை தகுந்தகிலுகிலுப்பை
கொடிக்கயர்தாம்புக்கயர் குழந்தைகட்டேணைக்கயர்
அடுக்கிலைவுரிகள் அழகானசிற்றுரிகள்
பிரமணைகள்சிம்மாடு பிறப்பங்கோலதானமைத்தாள்
எண்ணெய்குடுக்கைகளும் ஈச்சங்கோல்தாழைநாரும்
பார்த்துகுறியுரைக்க பலகாரதட்டுகளும்
கண்டுகுறியுரைக்க கனத்தவேர்மூலிகையும்
இத்தனையுங்கொண்டுமல்லோ எடுத்தமைத்தாள்கூடையிலே
கட்டுவச்சிபோலாக பக்கத்தில்கூடைவைத்தாள்
இடைபக்கம்கூடைவைத்து வலக்கையில்கோல்பிடித்து
மலைக்குறத்தியைப்போல மாதுயிகவெழுந்தாள்
அன்னநடைதுரோபதையாள் அசைந்துநடக்கையிலே
காண்டாவனமெரித்த காளையவர்பார்த்து
குறத்தியருகில்வந்து கோபலர்மச்சினரும்
குஞ்சிரிப்புகொண்டுமவர் குலுங்கநகைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
சேர்த்துமவரணைத்து செங்கனிவாய்முத்தமிட்டு
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
தருமரும்வீமருமே தம்பிமாரிருவர்களும்
காணவேவேண்டுமென்று கட்டழகிவாருமென்றான்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையும்
அப்படிக்கேசொல்லுதென்று ஐவர்க்குமுன்னேவந்தாள்

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அருங்கிளேயைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டுமல்லோ சரீரங்கள்பூரித்து
நீலக்குழலாட்கு நிலங்கிள்ளிகாப்புமிட்டு
ஐவருங்கூடியல்லோ ஆரங்குக்கேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
மலேக்குறத்திபோலே வடிவெடுத்துநீபோருய்
போறவிடந்தனிலே பொல்லாங்குநேர்ந்தாலே
செல்லுமிடந்தனிலே தீவினேகள்வந்தாலே
ஆரைநினைத்திடுவாய் ஆரணங்கேசொல்லுமென்ருர்
எவரைநினைத்திடுவாய் யெந்தனுக்குச்சொல்லுமென்ருர்
அந்தவுரைகேட்டு ஆரணங்யேதுசொல்வாள்
பங்காளிசீமையிலே பங்கம்வந்துநேர்ந்தாலே
எதிராளிசீமையிலே யிழிவுவந்துநேர்ந்தாலே
மன்னர்சபைநடுவே மாளாத்துகிலளித்த
மாளாத்துகிலளித்த மாயர்வந்துகாத்திடுவார்
ஆலிலேமேற்பள்ளிகொண்ட ஆயர்வந்துகார்த்திடுவார்
என்றுமவளுரைத்து யேந்திழையாளேதுசெய்தாள்
சகாதேவ்ராசாவை சடுதியிலேதானழைத்து
அருகில்நிறுத்திபல்லோ ஆண்டவரைக்கைதொழுதாள்
மாபெலிக்குமண்ணளந்த மாயவரேநான்சரணம்
ஆனேமுறையிடவே அன்றுவந்துகாத்தவரே
காளிங்கநல்மடுவில் காளேயந்தசர்ப்பத்தில்
கூத்தாடிநின்றவரே கோவிந்தாவந்தருளும்
மோகினிவேஷங்கொண்டு முக்கண்படைத்தவற்கு
காமங்களுண்டுபண்ண கரிமுகவாவந்தருளும்
மாதுநான்வருந்துகையில் மாயவரேவந்தருளும்
கோதைநான்வருந்துகையில் கோபாலாவாருமையா
என்றுமவள்முறையிடவே யெம்பெருமாள்தானறிந்து
கெருடன்மேலேறியல்லோ கேசவரும்வாராரே
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டார்மாயவரும்
பாஞ்சாலியருகில்வந்து பாரளந்தாரேதுரைப்பார்
ஏதுக்கெனேயழைத்தாய் யென்பிறப்பேதங்கயரே
அழைத்தநல்லகாரியத்தை ஆரணங்கேசொல்லுமம்மா
அப்போதுதுரோபதையாள் ஆயருக்கேதுசொல்வாள்
அத்திபுரம்நான்போய் ஐவரையும்பார்க்கவேணும்
மலேக்குறத்திவேஷங்கொண்டேன் மைந்தாருகிலில்லே

கைகுழந்தைவேணுமென்றால் கரிமேகாஅண்ணாவே
ஐவர்க்கிளையவரை அர்ச்சுனனார்தம்பியரை
சாயாம்புமேனியரை சகாதேவராசாவை
எனக்குக்குழந்தையாக யெம்பெருமானாண்டுபண்ணும்
கைக்குழந்தைபோலேயல்லோ கரிமேகாவுண்டுபண்ணும்
என்றுமங்கபாஞ்சாலி யெம்பெருமாளைக்கேட்க
மாயர்மனமிதங்கிமைந்தர்வடிவுதங்கார்
அருச்சுனனார்தம்பியரை ஆண்குழந்தையாக்கிவிட்டார்
இளையசகாதேவன் யேந்துங்குழந்தையானான்
மாயரருளாலே மைந்தன்வடிவுகொண்டான்
கோபாலர்தன்னருளால் குழந்தைவடிவெடுத்தான்
அப்போதுதுரோபதையாள் ஆயனரைக்கைதொழுது
மாயர்பதம்பணிந்து மைந்தனைத்தானெடுத்து
மலைக்குறத்திபோலே கட்டினாள்பாலகனை
கூடையிடுக்கிவைத்தாள் குழந்தைமுதுகணிந்தாள்
கையிலபிரம்பெடுத்துக் கட்டுவச்சிபோலாக
பொன்னுமலைகட்டுவச்சி போலேயவள்நடந்தாள்
அன்னநடைநடந்து அருங்கிளியாள்போகலுற்றாள்
பஞ்சவரும்மாயவரும் பார்த்துமனமகிழ்ந்தார்
காரிகையாள்நாயகியை கண்டுமனமகிழ்ந்தார்
தோராவடிவழகி துரோபதையாளப்போது
ஐவருக்கும்மாயருக்கும் அடிவணங்கிதெண்டனிட்டாள்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டாள்
ஐவர்களுந்தான்பார்த்து அழகாகயேதுசொல்வார்
காரிகையாள்துரோபதைக்கு கண்ணெச்சலாகுதென்று
ஏழுலகமாளுகிற யெம்பெருமாளப்போது
பூமியைக்கிள்ளிபல்லோ பொட்டிட்டார்துரோபதைக்கு
திருஷ்டிசுழட்டியவர் தெருவெங்கும்விட்டெறிந்தார்
மாயவரும்ஐவரும் மனதுமிகக்குளிர்ந்து
போய்வாருமென்றுசொல்லி புகழ்ந்துவிடைகொடுத்தார்
விடைபெற்றுபாஞ்சாலி விடுபட்டாளந்நேரம்
போராளேதுரோபதையாள் பூமணக்கவேர்மணக்க
மைந்தனைமுதுகணிந்து மயிலையும்வாராளே
குழந்தைமுதுகணிந்து கூடையிடுப்பில்வைத்து
பிரப்பங்கோலைப்பிடித்து பெருமையுடன்வாராளே
இஞ்சிவனந்தாண்டி யெலுமிச்சஞ்சோலைவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதனம்பூசோலைவிட்டு
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி

காரைபெறுத்தவனம் காட்டுகளாபூர்த்தவனம்
சூரைமுளைத்தவனம் சுண்டக்காய்காய்க்குவனம்
அல்லியுந்தாமரையும் அடர்ந்தவனந்தாண்டி
கோகிலமுந்தாராவுங் குலாவும்வனந்தாண்டி
அன்னமுந்தாராவும் அரையும்வனந்தாண்டி
அத்திப்புரங்கேடி வந்தாளே ஆணழகி
தாமமுடியாளும் தைலாட்டானவீதிவிட்டு
கட்டழகிதுரோபதையாள் கர்ணரிடவீதிவிட்டு
சாமத்துரோகியல்லோ சகுனியுடவீதிவிட்டு
நூலாங்கடுந்திரளார் நூற்றொருவர்வீதிவிட்டு
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்வீதிவந்தாள்
அந்தத்தெருக்களிலே வாழ்கின்றமன்னரெல்லரும்
இளமைமுதுமையுள்ளோர் யெல்லோருந்தான்சேர்ந்து
வயதுசென்றமன்னர்களும் வாலிபவீரர்களும்
எல்லாருமொன்றாக யிவளைவந்துசூழ்ந்தார்கள்
நரைத்தபழங்களெல்லாம் நாடிவந்துயேதுசொல்வார்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
மலையிற்குறத்தியரே மயிலனையேநாயகமே
எங்களிடமாளிகைக்கு யேந்திழையேவந்தாயானால்
வனமானமாளிகைக்கு வந்திருந்தாயாமானால்
நீர்-ஆடுக்கழலாடி அம்மானைதானாடி
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் வூஞ்சலமிகவாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
சொக்கட்டான்சூதாடி சுகமாகவாழ்ந்திருப்பாய்
எங்களிடபெண்டுகளை வுனக்கேவல்செய்துவைப்போம்
ஆணைப்பிறந்தவர்கள் ஆனபணிசெயதுவைப்போம்
தேவாமிர்தங்களும்நீ தேவையென்றுசொன்னாலும்
கொண்டுவந்துதான்கொடுத்து கும்பிட்டுவீற்றிருப்போம்
பாலும்பழமுமுண்டு பஞ்சணைமேல்படுத்து
நீ-கட்டிலின்மேல்வீற்றிருந்தால் கால்பிடிக்கநாமிருப்போம்
மனையாளிடவார்த்தை மர்மமாயக்கேட்பதில்லை
பெண்களிடவார்த்தை பிரியமாய்க்கேட்பதில்லை
உன்சொல்லைமேலாக யெண்ணிமிகநடப்போம்
உன்மனதுக்கிசைந்தப்படி நடப்பேண்டிகட்டிவட்டுவச்சி
வாராயோபெண்மயிலே யென்றுமவருரைத்தார்
அப்போதுகடடுவச்சி ஆரணங்குயேதுசொல்வாள்
மலைக்குறத்திபோலாக வாய்திறந்தேதுசொல்வாள்
கூவுங்குயில்போலே கொம்பனையாளேதுரைப்பாள்
வாய்திறந்துமன்னருக்கு மறுவார்த்தைசொல்லுகிறாள்

இன்னம்பலமிருகங்கள் யெடுத்துகரிசமைப்போம்
எச்சானசாதியல்லோ யெங்கள்குறச்சாதி
நற்குலந்தனிலுதித்த ராசர்களுமானால்
நாட்டியுள்ளகுறத்திகள் மேலாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்றொருவன் நத்தியேவந்தானானால்
உலகளந்தார்தன்னருளால் சுவர்க்கமில்லையென்பார்
குருவினுடபத்தினியை குறித்துவந்தானானால்
கோபாலர்தன்னருளால் கொடுமென்பார்தன்னரகம்
அண்ணனிடதேவியரை அடுத்துவந்தானானால்
அருராமச்சக்கிரமே அவன்தலையையறுக்கும்
இப்படியாயுரைப்பார்கள் யேழுலகந்தன்னிலே
எல்லாநீரறிந்தவர்கள் யென்னைத்தொடலாமோ
கொற்றவரேயுங்களுக்கு தேவியர்களில்லையோ
கூசாமலுங்களிட மனையிடத்துபோய்ச்சேரும்
ஏன்காணுமன்னர்களே யிப்படிக்குச்சேரன்னீர்
என்குறவன்தான்றிந்தால் யேதுபிழைவருமோ
குலமன்னாநீங்களானால் குறத்தியைப்பார்த்து
ஐவரானெங்கருவ செனக்குமணவாளர்
அவராறிந்தாற்பழுதுவரு மரசர்களேம்பாம்
எந்தனுக்கேவல்செய்து எனையாளவந்தீர்
ஏவற்பணிசெய்வதற்கு யெட்டுலட்சமுண்டு
ஏழுபேரெங்களுக்கு சக்காளத்திமார்கள்
இன்னமுன்டென்வணவனுக் யெண்ணத்தொலையாது
எங்களதுகுறச்சாதி யேச்சானசாதி
எங்களுக்குமேலான அரசர்களேகேளும்
வெள்ளெலிகறிசமைத்து விருந்துகளைசெய்வோம்
விஸ்தாரஆமையுடன் சீரிப்பிள்ளைதின்போம்
கொக்குநரியுடனடித்துக் கொண்டுமேகரிசமைப்போம்
கொண்டைமுசல்தான்பிடித்து கொழும்புபலசெய்வோம்
காட்டெருமைபன்றியுடன் கறிசமைத்துத்தின்போம்
கண்டகண்டமிருகமெல்லாம் உப்புகண்டமிடுவோம்
பெருச்சாளிதான்பிடித்து பொரியலதுசெய்வோம்
பெரும்பூனையதுபிடித்து விருந்துநாங்கள்செய்வோம்
பாம்புதின்போம்பல்லிதின்போம் பச்சோணான்சுடுவோம்
பலதினுசுமிருகங்கள் யெடுத்துகரிசமைப்போம்
எச்சானசாதியல்லோ யெங்கள்குறச்சாதி

நல்லகுலந்தனிலுதித்த ராசர்களுமானால்
நாட்டிலுள்ளகுறத்திகள்மே லாசைவைக்கலாமே
ஒருவன்பெண்டைமற்றொருவன் நத்திவந்தானானால்
உலகளந்தார்தன்னருளால் சுவற்கமில்லையென்பார்
குருவினிடபத்தினியை குறித்துவந்தானானால்
கோபலர்தன்னருளால் கூடுமென்பார்நரகம்
அண்ணனுடதேவியரை அடுத்துவந்தானானால்
அரிராமச்சக்கிரமே அவனதலையறக்கும்
இப்படியாயுரைப்பார்கள் ஏழுலகந்தனிலே
எல்லாநீரறிந்தார்கள் என்னைத்தொடலாமோ
கொற்றவரேயுங்களுக்கு தேவியர்களில்லையோ
கூசாமல்உங்களிட மனையிடத்துச்சேரும்
மன்னர்களேவுங்களுக்கு மனையாளுமில்லையோ
மகாராசாபிள்ளைகளே மனையிடத்திற்போம்போம்
கீறிதின்னுங்குறத்தின்மேல் ஆசைகொண்டீர்நீங்கள்
கீர்த்தியல்லோஉங்களுக்கு எழுந்துநடப்பீரே
ஆமைதின்னுங்குறத்தியின்மேல் லாசைகொண்டீர்நீங்கள்
அதுமுறைமையல்லகண்டாய் அணுகாமல்நடவும்
என்றுமவள்மிகவுரைகது இணைவிழியாள்மிரட்டி
இளங்குறத்திசாயலைப்போல் இடைதுவளநடந்தாள்
அப்போதுபூங்குறத்தி அழகானகட்டுவச்சி
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
மலைக்குறத்திபோனபின்பு மன்னர்மனந்தளர்ந்து
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நினைவுதடுமாறி
அவர்கள்தொழிலமறந்து அசைந்துநடைநடந்து
சாதித்தொழில்மறந்து கானைநடக்கசந்து
பூசைத்தொழில்மறந்தார் புஷ்பமெடுக்கசந்தார
இருந்தயிடமொழிய எழுந்துநடக்கறியார்
கானக்குறத்தியினால் காமம்பெரிதானார்
மாலைக்குறத்தினால மையல்பெரிதானார்
வாய்பேச்சுதான்குளறி மயங்கிவிழுந்தார்கள்
தங்கள்நினைவுகெட்டுத் தான்படுத்தார்பூமியிலே
இப்படியாகவல்லோ யிவரிருககும்வேளையிலே
அப்போதுபூங்குறத்தி அந்தத்தெருதாண்டி

கருணன்வீதிவருகிறது.

கருணரிடவீதியிலே கட்டுவச்சியேதுசொல்வாள்
வாரதொருபூங்குறத்தி மயில்போலவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
இவ்வீதிவாழுகிற இளவிசையர்பெண்டுகளே
கைபார்த்துக்கொள்ளலியோ கனத்தகுறிகேட்கலியோ
பச்சையதுகுத்திக் கொள்ளலையோபைங்கிளிகள்
உரிகையறுவாங்கலியோ வுஞ்சல்கயர்கொள்ளலியோ
தாம்புகயிர்கொள்ளலியோ தார்வேந்தர்வீதியிலே
ஓலைகிலுகிலுப்பை கொள்ளலையோபிள்ளைகட்கு
ஐங்காமத்தாளதுதான் வாங்கலியோஆச்சியரே
பல்நோவுக்காரருக்கு பச்சிலைகள்கொள்ளலியோ
தாள்நோவுக்காரருக்கு தான்மருந்துகொள்ளலியோ
இப்படியாய்க்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
அப்பெரியவீதியிலே வாழுமனிதரெல்லாம்
சிறியோர்கள்பெரியோர்கள் சேர்ந்தாரொருபுறமாய்
வாலைப்பிராயமுள்ள ராசரெல்லாந்தான்பார்த்து
காமக்குறத்தியரை கண்டுமயலானார்
பாவைகுறத்தியரை பார்த்துமிகவணங்கி
குறத்தியழகைப்பார்த்து கொற்றவர்களேதுசொல்வார்
கண்டீரோமன்னர்களே காமக்குறத்தியரை
பார்த்தீரோராசர்களே பாவையழகுதன்னை
இப்படியாய்பெண்டுகளை எங்கிலும்நான்கண்டதில்லை
தெய்வலோகம்வாழுகின்ற இந்திராணியீடல்லவே
இராமருடன்தேவி சீதைஎதிரல்லவே
அகலிகைவண்டோதரி யாருமெதிரல்லவே
இரம்பையூர்வசி நல்லதிலோத்தமையும்
தானியமாலியவரும் தகுந்தகருணாவதியும்
இந்தக்குறத்தியர்க்கு ஈடுசொல்லவாகாது
காமக்குறத்தியர்க்கு கட்டுரைக்கலாகாது
இவளழகும்பாவனையும் எங்கிலுங்கண்டறியோம்
திருவழகும்ஒப்பனையும் தேசத்தில்கண்டறியோம்
இப்படியாய்ச்சொல்லியல்லோ எல்லவருமோடிவந்தார்
மாலைக்குறத்தி மலைக்குறத்திமுன்னேவந்தார்
கானக்குறத்திமுன்னே வந்துமவரேதுசொல்வார்
ஆரடிகட்டுவச்சி அன்னமேபூங்குறத்தி

எவளோடிகட்டுவச்சி யிந்தத்தெருவில்வந்தாய்
உன்னழகைக்கண்டல்லோ உருகுதடியெங்கள்மனம்
உன்வடிவழகைக்கண்டல்லோ மயங்கித்தவிக்கிறோம்
எங்களுடமாளிகைக்குவந்தாயேயாமானால்
கட்டநல்லபட்டமுண்டு கழட்டபணிதிமுண்டு
போடவுடமையுண்டு பூட்டப்பணிதிமுண்டு
அத்தருண்டுபுட்பமுண்டு அதற்கேற்றகட்டிலுண்டு
பூசப்புனுகுமுண்டு புகழாஃகந்தமுண்டு
அன்னவூஞ்சல்மேலே ஆடலாமெப்போது
உன்னைப்பிரியாமல் வுகந்துவிளையாடிருப்போம்
ஏவல்பணிசெய்து எப்போதும்வீற்றிருப்போம்
ஏன்காணும்கட்டுவச்சி யிளங்குறத்திநாயகமே
வாராயோயெங்களுட வர்னமணிமாளிகைக்கு
என்றுமவர்கேட்க இளங்குறத்திகட்டுவச்சி
மலையாளப்பூங்குறத்தி மன்னவருக்கேதுசொல்வாள்

குறம்

ஏன்காணும்மன்னர்களே யிடக்குகளைச்சொன்னீர்
இன்னாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
பலசாதிக்குறத்தியைப்போல் எண்ணியேதானுரைத்தீர்
பரமசிவன்பார்வதிக்கும் கைபார்க்குங்குறத்தி
கானகத்தில்வாழுகின்ற குறத்தியைப்போல்நினைத்தீர்
கந்தருக்கும்வள்ளியற்கும் கைபார்க்கும்பூங்குறத்தி
இன்னாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
இந்திரற்கும்தேவியற்கும் குறியுரைக்குங்குறத்தி
என்னையந்தெரியாமல் அனியாயஞ்சொன்னீர்
இன்னாட்டுகுறத்தியைப்போல் யிடைந்துநடப்பீரே
என்குறவரைக்கண்டால் இப்பொழுதுதன்னில்
இந்தட்சணமுங்கள்மண்டை உருளஅடித்திடுவார்
குறவருடக்கூட்டமெல்லாம் அடியோடேவந்து
கொற்றவனார்சீமைதன்னைச் சுட்டெரிக்கப்போறார்
குறச்சாதிஎன்சாதி யிழிவானஎன்சாதி
கொற்றவரேநானுமக்கு கட்டுமோதான்சொல்லும்
குறநாற்றுமுங்களுக்கு மட்டியடியாதோ
கொம்பனையாள்மேலாசை தோன்றுதோதான்சொல்லு
கருணருடவீதிதன்னில் அதர்மங்களுண்டாச்சோ

கட்டழகர்கூடியேயென் கைபிடித்துவந்தீர்
கருணரிதைதானறிந்தால் கடும்பகைகள்நேரும்
காளைகளேவுங்களுக்கு குடிபழுதுவருமே
இச்சையுடனித்தெருவில் பிச்சைக்குநான்வந்தேன்
எந்தனையும்நீங்களெல்லாம் பெண்டழைக்கலாமோ
சமுசாரியானவனை தேடியேபெண்டழைத்தால்
தன்குடிக்குப்பழுதுவரு மென்றெண்ணிநடவும்
ஒருவனிடதேவிதன்னை ஒருவனத்தியழைத்தால்
உடனேயவன்கலைக்கு பழுதுவருமென்றார்
பிறருடையபெண்டுகளைப் பேதபபடநினைந்தால்
பெருநரகம்அடைவாரென்று பெரியோர்கள்சொல்லுவார்கள்
இப்படியாயுலகுதனில் அறிவழிந்தமாந்தர்
எத்தனையோகோடியுண்டு எனக்குத்தெரிந்தளவு
ஸ்ரீராமர்தன்னுடைய தேவியருளாலே
தென்னிலங்கைராவணனும் க்ஷணத்தில்மடிந்தானே
அகலிகைதன்னாலே ஆயிரங்கண்ணுடையாள்
அவளாசைதன்னாலே பூனைப்போல்நடந்து
உள்நுழையும்வேளையிலே கௌதமருங்கண்டு
ஒப்பாதமனக்கொதித்து மெய்யுடனேயவரும்
தேவேந்திரனென்றறிந்து சிறியந்தமுனியும்
சீக்கிரமாயவன்கேட்க வாக்குரைத்தாரவரும்
இந்திரன்தன்றேகமெல்லாம் யோனியாகவென்று
இட்டாரேபெருஞ்சாபம் எல்லையுலகரிய
கௌதமர்சாபத்தினுல் யிந்திரனும்நொந்து
கிலேசங்கொண்டு அவருடைய பாதத்தில்விழுந்தாள்
சாஷ்டாங்கதெண்டனிட்டு சரணமென்றுபணிந்து
சுவாமியென்னைக்காருமென்று மிகவணங்கியுரைத்தான்
என்றுமிவள்தானுரைக்க கௌதமருமிரங்கி
இந்திரனார்தேகமெல்லாம் விழியாகவென்றார்
அன்றுமுதலின்றளவு கௌதமனாருரையால்
ஆயிரங்கணிந்திரனா ரென்றுசொல்லுமுலகம்
தேவேந்திரன்போனபின்பு கௌதமனார்தாமும்
தேவியரைத்தானழைத்து மிகவுரைப்பாரவர்க்கு
எண்டிபெண்ணே அகலிகையே யிந்தமதியுனக்கு
இந்திரன்தன்மேலாசை கொண்டிருந்தாயென்றார்

அந்தவுரைகேட்டுமவள் பயந்துமிகத்தியங்கி
ஆண்டவனேயான்செய்த குற்றமதைக்கேளும்
நித்திரையாலெந்தனுக்கு நினைவுதடுமாறி
நீரென்றுமவரென்று நானறியேனென்றாள்
என்றுமிவள்தானுரைக்க கௌதமருமவெகுண்டு
இவளையொர்கற்பாறை யாகவென்றுசபித்தார்
இட்டதொருசாபத்தினால அகலிகையும்பார்த்து
ஆண்டவரேயென்குருவே ஐயாவேசுமாமி
அடியவள்செய்தவொரு குற்றம்பொருதகருளும்
இட்டதொருபெருஞ்சாபம் யெப்பொழுதுதீரும்
எந்தனுக்குரையுமென்று மிகநோக்கிபணிந்தாள்
என்றவள்தானுரைக்க மிகமனதில்மகிழ்ந்து
ஈரேழுயிரெல்லாம் ஆளுந்தெசரதனால்
ஸ்ரீராமலட்சுமணரை அனுப்பவென்றுகேட்க
சுந்தரமானலட்சுமணரை ஸ்ரீராமர்தனையும்
சுந்தரமாகவே யிருவரையுமனுப்ப
இராமரும்மனமகிழ்ந்து நலமாகநடந்தார்
இராகவரும்லட்சுமணரும் கூடவேதான்தொடர்ந்தார்
இராஜரிஷிதன்னுடனே மூவருமாய்வந்து
இராமருடன்லட்சுமணரும் வாசஞ்செய்தாரங்கே
இவரிருக்கும்வேளையிலே தாடகையும்வந்தாள்
இவரென்னவுரைத்தார் ஸ்ரீராமர்தானும்
எடுத்துரைப்பாரந்நேரம் யிராமரிஷியும்
என்னுடையயாகமதை கலைக்கவந்தபீடை
இவளுயிரைவாங்குமென்று வுரைத்தாரந்தரிஷியும்
குருவுரைத்தவாக்கியமதை கோபாலரறிந்து
கொப்பெனவேவில்லெடுத்து குணத்தொனியேசெய்து
தாடகையைவிழவடித்து மாரீசன்றன்னை
தகைமையுடனுயிரவதைத்து தகைமையுடனடந்தார்
விஸ்வாமித்திரர்தன்னுடனே வேண்டியிருவர்களும்
மிதிலைப்பதிநோக்கியல்லோ வருகின்றவழியில்
மிதித்தாரேஅகலிகையாள் கற்பாறைதன்னை
பாதம்பட்டவுடனேயவள் மேதினியிலேயெழுந்து
பத்தியுடன்சுத்திவந்து நமஸ்கரித்தாளவளும்
இராகவருந்தான்பார்த்து யிவளாரென்றுரைக்க
இராஜரிஷிபானவரும் யிராமருக்குரைத்தார்

அப்போது அகலிகையும் அண்டமெல்லாம்புகழ
ஆனந்தமாகவந்து கௌதமரைப்பணிந்தாள்
அகலிகைகௌதமருங் கூடிமிகவாழ்ந்து
கோபாலர்போலுஞ்சில பிள்ளைகளும்பெற்றார்
இப்படியாயுலகுதனில் யெத்தனையோகோடி
ஏனைப்பெண்டழைக்கவந்தீர் மன்னர்களேபோம்போம்
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லையுலகில்
அவகேடுபண்ணாலே வாருமேதீவினைதான்
இப்படிக்குத்தானுரைத்து யிடைதுவளநகைத்தாள்
இளங்குறத்திதனைபபோல யிடைதுவளநகைத்தாள்

வேறு,

குறத்தியவள்போனபின்பு கொற்றவரெல்லாரும்
மாதுமயலாலே வாடிமனந்தளர்ந்து
தையல்மையலாலே தங்கள்முகம்வாடி
காமன்கணையாலே களைபட்டுபோய்விழுந்தார்
நிலவுதடுமாற நெஞ்சுலர்ந்துவாயுலர்ந்தார்
படுத்தபடுக்கைவிட்டார் பார்மன்னரெல்லவரும்
குறத்தியவளாலே கொற்றவர்போய்படுத்தார்
மலைக்குறத்தியன்னாலே மனதைமறந்தார்கள்
கட்டுவச்சிதன்னாலே கைகாலசந்தார்கள்
தங்கள்குலதேவிகளை தான்மறந்தாரப்போது
ஒருவர்பேருரைப்பார்கள் மறுபேரழைப்பார்கள்
உணவுதடுமாறி உற்றசிவன்தான்குலைந்தார்
நினைவுதடுமாறி நித்திலங்குபூமுடியார்
திண்டுமறந்து தெருத்திண்ணைபோய்படுப்பார்
குறத்திகுமத்தியென்று கொற்றவர்கள்தாமிருப்பார்
மலைக்குறத்திவந்தாளெனழுந்திருப்பார்
கட்டுவச்சிவந்தாளென்று கண்ணெடுத்துப்பார்த்திருப்பார்
குறத்திகுறத்தியென்று குலைகுலைவார்மன்னரெல்லாம்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே

திரியோதிரன்வீதி வருகிறது.

மாலைக்குறத்தியவள் மலைக்குறத்திகட்டுவச்சி
வேலைப்பழித்ததொரு விழியாள்நடககலுற்றாள்
தேசத்தையாளுமந்த திரியோதிரனவீதியிலும்

நூலால்கடுந்திரளார் நூற்றுவர்வீதிவந்தாள்
மலைக்குறத்தியவள் மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
உரிக்கயர்வாங்கிலையோ வுத்தமியாள்பெண்டுகளா
சவரிமயிர்கொள்ளலையோ தார்வேந்தர்பெண்டுகளா
மாப்பிள்ளைக்கேத்த மருந்துணடுகொள்வீரோ
புருஷருக்கேற்ற பொடியுண்டுவாங்குவீரோ
என்றுமவள்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
அப்போ-திரியோதிரன்வீதியிலே சிலமன்னர்தான்பார்த்து
காமக்குறத்தியரை கண்டுமயலாகி
இவளார்காண்கட்டுவச்சி யிவ்வீதிவந்தவள்தான்
கட்டுவச்சிபேரழைக்க கண்டீர்களோமன்னர்களே
இந்நாட்டுக்குறத்தியல்ல யிவ்வீதிவந்தவள்தான்
மேல்நாட்டுதனில்வாழும் குறத்தியைப்போல்காண்கிறது
கெந்தருவர்தேவர்களோ காமனிடபத்தினியோ
தேவேந்திரனுடைய திருவுளத்தால்வந்தவளோ
ஈஸ்வரனார்தன்னிடத்தில் யிருக்குங்குறத்தியரோ
பார்வதியாளம்மனுக்கு பார்த்துகுறிசொல்பவளோ
மகாவுஷ்ணுதன்னுடைய மடைகுறிசொல்பவளோ
இலட்சுமியாள்தன்றனக்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
ஐயன்பிரம்மதேவனுக்கு ஆனகுறத்தியரோ
சரஸ்வதிநாயகிக்கு சகலகுறிசொல்பவளோ
மயிலேறும்வேலவற்கு மாதுகுறிசொல்பவளோ
தெய்வானைவள்ளியற்கு தேர்ந்துகுறிசொல்பவளோ
இவளழகைப்பார்ப்பதற்கு யிருகண்போதாது
புஸ்தகத்தைமாற்றடிக்கும் புறங்காலின்வடிவழகு
பூஞ்சிலம்புதண்டைகளும் புலம்பும்நடையழகும்
முத்துசிப்பிதன்னிற்போல் முழங்காலிரண்டழகும்
ஈணுதவாழை யிளவாழைத்தண்டதுபோல்
இளதாழைத்தண்டதுபோல் யிருதுடையுரண்டழகும்
ஆலிலைபோலே அமைத்தவயாழகும்
குரும்பிநுழையாத கும்பத்தனமழகும்
கோர்த்தமுத்துபோல கொங்கைகளிரண்டழகும்
முறுக்கம்பூயிதழதுபோல் வுதட்டழகும்பாவனையும்
முத்தணிந்தபல்லும் முகத்தழகும்ஒப்பனையும்

வட்டமுகமும் மகராசிகண்ணிரமும்
வண்ணத்திருதோளும் கோர்த்தமணியழகும்
அவனிபதினலு லோகமுந்தீரிந்துவந்தோம்
இவளழகுக்கொப்பானர் யாருமுலகிலில்லை
என்றுமிவர்கள்சொல்லி யிவளைவந்துசூழ்ந்தார்கள்
குறத்தியருகில்வந்து கொற்றவர்களேதுசொல்வார்
வாடிகுறத்தியெங்கள் வர்னமணிமாளிகைக்கு
கால்பிடிப்போம்கைபிடிப்போம் கனத்தபணிசெய்வோம்
வேண்டியுனைத்தொழுது வேணபணிசெய்திருப்போம்
ஆணாய்பிறந்தவர்கள் அடப்பங்கட்டுநின்றிடுவோம்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் வேணதொழில்செய்திடுவோம்
ஆரங்காய்சீராடி அம்மானைாடி
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் பைங்கிளிப்போல்வீற்றிருப்பாய்
பளிங்குமாமண்டபத்தில் பாங்காகவீற்றிருப்பாய்
உந்தன்மேலேயாசை கொண்டுதிரிகின்றோமே
பூக்குறத்தியுன்னைமேல பெண்டுபிள்ளைதான்மறந்தோம்
வாடிகுறத்தியென்று மையல்கொண்டமன்னரெல்லாம்
அப்போதுகுறத்தியவள் அருங்கிளிபோல்வாய்திறந்து
மன்னர்முகம்நோக்கி மலைக்குறத்தியென்னசொல்வாள்

குறம்.

வாடியென்றும்போடியென்றும் வழிமறித்துயென்னை
வம்புஞ்சொல்லவந்தீர் மன்னாகளேபோம்போம்
நாற்றொருவர்வீதியிலே வேற்றுமைதானுண்டோ
நுட்பமறியாமலென்னை சொற்பமென்றுமதித்தீர்
கலியாணஞ்செய்யலையோ காளைகளேயுமக்கு
கன்னிகுறத்தியின்மேல் மையல்கொண்டீர்நீங்கள்
ஒழியாதநரகமெல்லாம் மறைநூலில்சொல்லும்
அண்ணன்தம்பிதேவியர்மே லாசைகொள்வாரானல்
ஆசாரநரகந்தன்னில் அழிந்திடுவார்மாந்தர்
குருவினதுபத்தினியும் ஆசைகொண்டாலல்லோ
கொள்ளாதநரகத்தில் கூடியழுந்திடுவார்
இப்படியாயுலகுதனி லழுந்தினவர்கள்கோடி
நிரமூடங்கொண்டவரே மிடைந்துநடைப்பீர்கள்

என்றுசொல்லிபூங்குறத்தி மிகநோக்கிநடந்து
இடைகுலுங்கநடைகுலுங்க நடைநடந்தாள்குறத்தி

வேறு.

குறத்தியவள்போனபின்பு கொற்றப்போர்மன்னவர்கள்
வாடிமனந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
வார்த்தைகுளறியல்லோ மறுவேடமானார்கள்
முக்காடுபோட்டு முடிமன்னர்பள்ளிகொண்டார்
பெண்டுபிள்ளைதான்மறந்து பூமியின்மேல்தான்படுத்தார்
மாதுமயக்கம் பெரிதாச்சுமன்னவற்கு
கன்னிமயக்கமல்லோ தலையெடுக்கப்போகாது
அன்னமும்தண்ணீர் அருந்தார்கள்மன்னவர்கள்
ஒருவருடன்பேசாமல் உத்தமர்கள்வீற்றிருப்பார்
இப்படியாகவல்லோ யிவரிருக்கும்வேளையிலே
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
வாராளேபூங்குலத்தி மாதர்கள்வீதியிலே
பாடிவருகிறாகள் பத்தினியாள்வீதியிலே
கைபார்த்துக்கொள்ளலியோ பச்சைபொட்டுகுத்தலியோ
குறியொன்றுகொள்ளலியோ கொம்பனைமார்பெண்டுகளே
கூடாதபெண்களுக்கு கூட்டிவைக்குமருந்துகொள்வீர்
சேராதபெண்களுக்கு சேரமருந்துமுண்டு
வாழாதபெண்களுக்கு வாழமருந்துண்டைகொள்வீர்
உத்தமவிலக்கவென்றால் மெத்தமருந்துமுண்டு
சண்டைகெலிப்பதற்கு சாந்தகுளிகையுண்டு
எதிரிமயக்கவல்லோ என்னிடத்தில்மருந்துமுண்டு
தளர்ந்தஸ்தனம்கிமிர தகுந்தநல்லமருந்துமுண்டு
என்றுமவள்பாடி இளங்குறத்திவாராளே
மானகரமாளுகின்ற மகாராசனதேவியரும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகைக்கு
நாற்றொருவர்பெண்களும் வேற்றுமைகளில்லாமல்
சொக்கட்டான்சூது சதுரங்கந்தானாடி
அம்மானார்பந்தாடி அழகுகழலாடி
ஆராங்காய்தானாடி ஆலித்துகொண்டாடி
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் உஞ்சலுதைத்தாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிமார்வீற்றிருந்தார்

கொம்பனைமார்களெல்லாம் கூடிவிளையாடினார்கள்
வோரகத்திமார்களெல்லாம் ஒருமித்து அங்கிருந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
வீதியிலாடியல்லோ வருங்குறத்திச்சேதிடுவோம்
பெருந்திருவாள்வீதிப் படிவாசல்காத்திருக்கும்
குறத்திவருமழகைப் பார்த்திருந்தகொம்பனைமார்
ஒருத்திக்கொருத்தி யுறவாகியேதுசொல்வார்
கண்டீரோ அக்கமாரே கட்டுவச்சிபேரழகை
பார்த்தீரோதங்கைமாரே பூங்குறத்திதன்னழகை
சாய்ந்தநடையழகு சதிரானகைவீச்சு
ஓய்ந்தநடையழகும் உருட்டிவிட்டபார்வைகளும்
கோர்த்தகழுத்தழகும் கொண்டையின்மேல்பூவழகும்
தகுந்த்சவிளிகளும தாள்பூட்டுசங்கிலியும்
மூன்கைமுதாரிகளும் மோதிரம்பொன்னுடகளும்
தங்கப்பதக்கமும் தகதகெனமின்னிவர
மார்பில்சரப்பளியும் தோளில்புரண்டோட
அக்குமணிதாவடங்கள் ஆபரணஞ்சோதிமின்ன
பச்சைமணியழகும் பலகாரைத்தாவடமும
இந்தக்குறத்தியரை யிணையழகுகண்டீரோ
இந்நாட்டாளல்லவிவள் இத்திசையுமல்லவென்றாள்
தென்னாட்டுசூழலல்லோ தெய்வகன்னியல்லவென்றாள்
தெய்வக்குறத்தியிவள் தெளிவரிந்தகட்டுவச்சி
நினைத்தகுறியுரைப்பாள் நிலமையுள்ளபூங்குறத்தி
ஆச்சியரண்மனைக்கு அழைத்துமெள்ளவாரும்
கட்டழகிமாதரெல்லாங் கைகாட்டிகுறிசேழ்ப்பார்
என்றுசிலதாதியர்கள் எழுந்திருந்துஉள்நுழைந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
செம்பொன்திரைநீக்கி சேரவந்துதெண்டனிட்டு
அம்பொன்திரைநீக்கி அழகாகதெண்டனிட்டு
தெண்டனிட்டுதாதியரும் சேரஎழுந்திருந்து
மோதிரமின்னவல்லோ முடிமேலேகைதொழுதார்
பேடைமயில்கண்ணாளும் பெருந்திருவாள்தான்பார்த்து
நீயார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்
எவர்பெண்கள்தாதி எனக்கரியகூறுமென்றாள்
தாதியவள்கேட்டு தையலற்குயேதுசொல்வாள்

ஆர்பணியுமல்லவள்காண் அடியேனுனுன்பணிதான்
பெரியோருடைய பெருமானேவுன்பணிதான்
மானுகமானுகிற மகாராசர்சொற்படிக்கே
உங்களதுவீதிபடி காற்கிரதாதியென்றாள்
பேரால்மிகுந்ததொரு பெருந்திருவாள்தான்கேட்டு
நீயிங்கேவந்ததொரு காரணத்தைசொல்லுமென்றாள்
ஏதுக்காய்வந்தாய்நீ எனக்கறியகூறுமென்றாள்
தையலுரைகேட்டு தாதியருமேதுசொல்வாள்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னுச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
காணுவதிசயங்கள் கண்டுவந்தேன்வீதியிலே
பாராவதிசயங்கள் பார்த்துவந்தேன்வீதியிலே
தேசத்தையாளுகின்ற திரியோதிரராசன்
அவர்க்குமொருவாண்டு எனக்குமொருமூவாண்டு
வாளெடுத்துகையெடுத்தது வாசலிலேநில்லுமென்றார்
வாள்கொடுத்தநாள்முதலாய் வுன்வாசல்காத்திருந்தேன்
அன்றொருநாளின்றளவும் அணிவாசல்காத்திருந்தேன்
மண்டலத்துபெண்களெல்லாம் வாராதபேர்களில்லை
சீமையிலுள்ளபெண்கள் சேனபெண்கள்வந்திருப்பார்
பட்டமரசாளும் பத்தினிமார்வந்திருப்பார்
அந்தரத்துபெண்கள் அனேகம்பேர்வந்திருப்பார்
மேலோகம்வாழுகின்ற மெல்லியர்கள்வந்திருப்பார்
பிச்சைக்கிவந்தபேர் சொல்லவேமாளாது
இரக்கவென்றுவந்தவர்கள் எத்தனையோகோடியுண்டு
குறிசொல்லவந்தவர்கள் கோடானகோடியுண்டு
இப்படிகொத்ததொரு குறத்தியரைநான்கண்டதில்லை
காணக்கிடையாது கன்னியிளங்கொடியாள்
பார்க்கக்கிடையாது பத்தினியாள்கட்டுவச்சி
இதுபுதுமைகண்டுமெல்லோ சொல்லவந்தேனுந்தனண்டை
அழைத்ததிருவுளமே ஆச்சுயென்றுதெண்டனிட்டாள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஓரகத்திமார்கள் உற்றும்வர்கள்பார்த்து
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்ஏதுசொல்வாள்
மாதுகுறத்தியரை வரவழைக்கவேண்டுமோதான்
சம்மதியுண்டானால் தங்கையாள்சொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு அனைவரும்சம்மதித்து

தாதிமுகம்நோக்கி தையலர்கள்ஏதுசொல்வார்
கன்னிகுறத்தியரை கடுகஅழையுமென்றார்
மாதுகுறத்தியரை வரவழைத்துவாருமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியவள்
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்து
பததடியும்ஓரடியாய் பதறிவழிநடந்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாள்வீதியிலே
கட்டுவச்சிமுன்னேவந்து கன்னியருமேதுசொல்வாள்
குறத்திமுன்னேவநது கொம்பனையாள்யேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மாளிகைவாசலுக்கு
நாலால்கடுந்திரளரர் நூற்றொருவர்தேவிக்கும்
பார்த்துகுறியுரைத்தால் பாக்கியங்கள்தந்திடுவார்
கண்டுகுறிவுரைத்தால் கனகபணிதான்கொடுப்பார்
வருகிறையோகட்டுவச்சி மாளிகைக்கு என்றழைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமலைக்குறத்தி
நல்லதென்றுசம்மதித்து நடந்தாளேகட்டுவச்சி
அடிசிலம்புபாடகமும அசையவழிநடந்தாள்
தண்டைசிலம்பசைய தானடந்தாள்கட்டுவச்சி
ஆடையொதுக்கியவள் அசைந்துவழிநடந்தாள்
பேடைமலர்க்கண்ணன் பெருந்திருவாளவாளிவந்தாள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
மண்டபத்தின்வழியாக வந்திருந்தாள்பூங்குறத்தி
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்து
குறத்தியவள்வீற்றிருக்க குருஞ்சிமணைபோடுமென்றாள்
மலைக்குறத்திவீற்றிருக்க வட்டமணைபோடுமெனறாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
ஏலக்கருங்குழல்மார் இட்டார்கள்பூந்தடுக்கு
கோலனனக்கட்டுவச்சி குந்துங்காளெனறுரைத்தார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கால்மடித்துபூங்குறத்தி கைககூடைமுன்னேவைத்து
ஒருகால்மடிததுமவள் ஒருகால்பிறகணைந்து
பிரப்பங்கோலகைபிடித்து பெருந்திருவாட்கேதுசொல்வாள்
நன்மையுண்டுயுன்மனைக்கு நானவருவதாலே
நாடாளும்ராசருக்கும் செல்வங்களில்சொன்னதிலம்மே
தலைக்குபரமகெவுளிகின்று சொன்னதிலம்மே
தனக்குவரும்செல்வங்களில்சொல்லமுடியாது

மார்தனக்குநேராக மனைக்கெவுளிசொன்னால்
மலைராமர் அருளாலே சந்தோஷமுண்டாம்
பெண்களானவர்க்கு யிருபக்கந்துடித்தால்
பூமியரசாளவதற்கு பிள்ளைபெருவார்கள்
மற்றுமுள்ளவலதுபக்கம் மங்கையர்க்குதுடிததால்
மாறுமலைபேரிடிகள் வலைந்துமல்லோவருமே
ஆணாய்ப்பிறந்தவற்கு வலதுபக்கம்துடித்தால்
அன்றெட்டாநாளையிலே அசரனிளையாள்வார்
கனத்ததொருயிடதுபக்கம் காளைகட்குதுடிந்தால்
காசினியில்வாழாமல் கைலாசம்சேர்வார்
இப்படியாயுகலந்தனில் சொல்லுகிறார்பெரியோர்

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்
எந்தநாடுங்களுக்கு யிருப்பிடத்தைச்சொல்லுவென்றாள்
வாய்திறந்துகட்டுவச்சி மயிலணையாளேதுசொல்வாள்

குறம்.

எந்தன்துநாடுதன்னை கேழ்க்கவந்தாயம்மே
இருப்பிடத்தைச்சொல்லுகிறேன் விருப்பமுடன்கேளும்
ஆதியென்றகைலாச நாதரருளாலே
ஐங்கரனார்தன்னருளால் அம்மையுமையருளால்
இந்தநாடெங்களது தென்நாடுஅம்மே
இந்திரரும்சூரியரும் யிருக்குமெங்கள்நாடு
சூரியருஞ்சந்திரரும் யிருக்குமெங்கள்நாடு
சுத்தமுள்ளபெரியோர்கள் தவம்புரியும்நாடு
அந்தணர்கள்வேதியரும் அழகானமுனிவர்
அனைவோருஞ்சதாகாலம் தவம்புரியும்நாடு
மந்திரங்கள்சாஸ்திரங்கள் மறையோதும்நாடு
மறவாமல்மூவரையும் துதிக்குமெங்கள்நாடு
சதுர்மகனார்யெங்களுக் குருபீடமமமே
காளியம்மையாளுவது யெங்களதுநாடு
ஆயரவரெந்தனிட வுடன்பிறந்ததமையன்
அவருடையதுவாரகைதான் யெந்தனதுநாடு
இந்திரனாரெந்தனுக்கு யிசைந்தவம்மானம்மே
அப்போதுதெய்வபதி நாங்களரசாள்வோம்

மேகவர்ணனெந்தனுக்கு சிறுதகப்பனம்மே
மெய்யான அவர்பதியை நாங்களரசாள்வோம்
நாகராசனென்தகப்பன் நாயகமேகேளும்
நாகலோகமெல்லாம் அரசாள்வோம்நாங்கள்
அந்தணராளுகிற பூமியெல்லாமுழுதும்
அடங்கலுமாமரசாள்வோம் ஒருவரெதிருண்டோ
தென்மதுரைசொக்கலிங்கம் யென்தகப்பனம்மே
தேவருடமணிபுரத்தை நாங்களரசாள்வோம்
ஈரெழுபதினாலு லோகமெல்லாநாங்கள்
எப்போதுமரசாள்வோம் யிணையொருவரில்லை
தப்பாமலெங்களது சீமைதனிலம்மா
தளராமலொருநாளும் பஞ்சங்களுமில்லை
அட்சயத்தாலாயிரம்பேர்க் கன்னங்களுமிடுவோம்
ஆதிகைலாசசிவ கங்கரனாரருளால
மத்திரத்தால்மாங்காய் பரிப்போமடிநாங்கள்
மாமுனிவர்தன்னருளால் மாயவனார்செயலால்
தந்திரத்தினால்தேங்கா யற்றுவிழச்செய்வோம்
தென்னிலங்கைரகுராமர் தன்னருளாலம்மே
பச்சைமலைகுடியிருந்து பழங்கள்மிகப்பரிப்போம்
பசிகாலமானாலே பட்டணந்தில்திரிவோம்
கொச்சிமலைகுடியிருந்து கோவைபழம்பரித்து
குளிர்காலமானால் குறியுரைக்கவருவோம்
அக்குமணிகொககுமணி கொள்வாயடியம்மே
ஆண்மைவரபுருடனுக்கும் பருந்துகொள்ளலையோ
பச்சைமணிபாலமணி யிச்சையுண்டாயுமக்கு
படைமுற்றுசண்டைவெல்ல வசியமுண்டுகொள்வீர்
இந்நாட்டுக்குறத்தியைப்போல் யிச்சைசொல்லமாட்டேன்
எந்நாளுமையவட்கு கைபார்க்குங்குறதி
உண்மையுள்ளகுறியுரைத்து வுச்சிதங்கள்பெற்று
வண்மையுள்ளயெந்தனிட மனையிடத்திற்சேர்வேன்
ஈரேழுநாளாச்சுதடி தென்மதுரைவந்து
இளங்கொடியாளல்லியற்கு விசைந்துகுறிசொன்னேன்
ஐந்தொருநாளாச்சுதம்மா துவாரகைக்குவந்து
அலமேலுமங்கையற்கு ஆனகுறிசொன்னேன்
பத்தொருநாளாச்சுதடி அத்திபுரம்வந்து
பாவையரேயுந்தனுக்கு கைபார்ப்பேன்நீவா

கைக்குழந்தைபசியாலே தறுதடியமமா
கடுகெனவேமனைபுகுந்து அன்னமள்ளியிடுவாய்
அரிபிளவும்வெற்றிலையும் அள்ளியிடுவாயே
அதற்கேற்றபிரமனிட பத்திரியுந்தாராய்

வேறு.

அந்தவுரைகேட்டு யந்தப்பெருந்திருவாள்
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்தாள்
அன்றுகுறையெந்தனது யெழுந்திருந்துமுன்னேவந்தாள்
அழைத்தபணிசொல்லுமென்று அருங்கிளிபாள்தெண்டனிட்டாள்
என்னபணிசொல்லுமென்று யிளங்கொடியாளேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
ஆனகுறத்தியற்கு அன்னம்படையுமென்றாள்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
கைகாலும்சுத்திபண்ணி கனிவாயுங்கொப்பளித்து
ஆக்குமடப்பள்ளியை அலகிட்டுத்தான்திறந்து
கோட்டைமடப்பள்ளியை குச்சிட்டுத்தான்திறந்து
முறத்திலிலைபோட்டு முத்தும்போல்சாதமிட்டு
சுற்றிக்கறிவகையைவைத்து புத்துருக்குநெய்வார்த்து
குத்துபருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்து
கட்டுவச்சிமுன்னேவந்து கருங்குழலாள்சொல்லுகிறாள்
மாலைக்குறத்தியரே மலைக்குறத்திவாருமென்று
கட்டுவச்சிநாயகிக்கு கைக்குசலந்தான்கொடுத்து
உன்-பாலனுக்கன்னம் படையுமென்றாள்தாதியரும்
அப்போதுகட்டுவச்சி ஆணழகியேதுசொல்வாள்
அன்னமதுவாங்கி ஆரணங்குக்கட்டுவச்சி
மைந்தனுக்குஅன்னமிட்டு வளநாடிவந்திருக்க
குழந்தைக்குஅன்னமிட்டு கொம்பனையுங்கையலம்பி
கூடையொருபக்கம்வைத்து குந்தினாள்பூங்குறத்தி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கூறுவாள்ராசகன்னி
நீ-இருக்கிறநாடு யெழிலானதேசமும்
மயிலனையேயுன்னுடைய மைந்தர்பெருமைகளும்

மைந்தர்பெருமையும் மற்றபேர்சந்தடியும்
ஒன்றுமொளியாமல் வுத்தமியேகூறுமெனறூர்
அப்போதுகட்டுவெச்சி ஆரணங்குயேதுசொல்வாள்

குறம்.

தென்னாடுமலைநாடு யிருக்குமந்தநாடு
தேசமடிகைலங்கிரி யிருக்குமெங்கள்நாடு
கல்லடைந்தமலைநாடு காறுமந்தநாடு
கைலங்கிரிநாதரங்கே காட்சிதரும்நாடு
சொல்லரியமலைநாடு சுகம்பெருகுநாடு
சோணாசயிசரடி தேசமடிநாங்கள்
எத்திசையும்புகழ்படைத்து யிருக்குமந்தநாடு
எழிலானமலைகாட்டு குறத்தியடிநாங்கள்
குத்திமெத்தக்குனிந்தாடும் குஞ்சாவநாட்டில்
கூசாமல்வாழவந்த தேசமடிநாங்கள்
வறுத்தமுத்துச்சென்னல்களும் முளைக்குமந்தநாடு
வாழருணகிரிநாடு தேசமடிநாங்கள்
முத்துமலைரத்னமலை யெங்களதுநாடு
நீலமலைவிமலமலை யெங்களதுநாடு
நித்தநித்தங்குறம்பாடி திரிவோமடிநாங்கள்
பச்சைமலைபவளமலை யெங்களிடநாடு
பரமசிவன்காளியுடன் வாதாடும்நாடு
கொச்சிமலைகுடகுமலை யெங்களதுநாடு
குமரேசர்வள்ளியரை கைபிடித்தநாடு
வெள்ளெருக்கும்பூச்சூடி யிருந்தஅண்ணாமலையில்
வேணவரங்கொடுப்பதற்கு குறியுரைக்குங்குறத்தி
உருக்கியபொன்கொடுத்தாலும் ஒன்றுமில்லையென்போம்
உண்ணாமுலையம்மனுக்கு வுகந்தமுதுபடைப்போம்
வெள்ளிமலைரத்னமலை யெங்களதுநாடு
விக்கினத்துக்குவேலவற்கும் குறியுரைக்குங்குறத்தி
கண்டததிலேகருப்புடைய கைலங்கிரிநாதர்
கர்த்தரிட்டதயவாலே குறியுரைக்கவந்தேன்

வேறு-தேனூர்விலாடம்மா தினமுஞ்சென்னல்விளையும்
கல்லின்மேல்நெல்விளையும் கதிர்வாய்க்குமேலோங்கும்
கட்டுகலங்காணும் கதிருழக்குநெற்காணும்
வாடைவடக்கிணும் வான்கமுகுதெற்கிணும்
சோலைவடக்கிணும் துய்யபலாமேற்கிணும்
கோவும்புலியுமொரு குளத்திலேநீர்குடிக்கும்
நீரியும்சர்ப்பமொரு கிண்ணியிலேபால்குடிக்கும்
எலியும்பூனையுமொரு சஞ்சரத்தில்வாழ்ந்திருக்கும்
தங்கமழைசொரிந்து தழைத்திருக்குமெங்கள்நாடு
மாதமும்மாரி மழைகள்பொழிந்துவரும்
திங்கள்மும்மாரிபெய்யும் தேசம்செழித்திருக்கும்
என்றுமவளுரைத்து யிருந்தாளொருபுரமாய்

பெருந்திருவாள் சொல்வது வேறு.

அப்போபெருந்திருவாள் அருங்கிளியாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கொம்பனையுமகூறலுற்றாள்
உந்தனதுசிமையெல்லா முறைத்தாயேகட்டுவச்சி
நீஎந்தவூர்எந்ததேசம் எனக்கறியக்கூறுமென்றார்
உந்தனதுகுலமும் உன்பேருஞ்சொல்லுமென்றார்
அப்போமலைக்குறத்தி ஆரணங்குசொல்லலுற்றாள்

குறம் வேறு.

[illegible]ங்கள்குலம்ராசகுலம் குறக்கூட்டம்தானுமல்ல
[illegible]லானகுடிசையிலே குடியிருப்போமம்மே
ஐ[illegible]ருக்கும்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
அபிமானங்குலையாத ஜாதியடிநாங்கள்
பஞ்சவர்க்குப்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
பசிதாபங்குலையாத ஜாதியடிநாங்கள்
பெண்டிருந்ததேசமெல்லாம் பிள்ளையொன்றுமறியோம்
பெருநெருப்பைத்தீண்டொணாத சாதியடிநாங்கள்
மாலையிட்டநாள்முதலாய் மனதறிந்தாரில்லை
மடிநெருப்பைதீண்டொணாத சாதியடிநாங்கள்
கூரையிட்டநாள்முதலாய் குணமறிந்ததில்லை
கொடிநெருப்பைத்தீண்டொணாத சாதியடிநாங்கள்

வேறு.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகியும்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி வர்ணமலைக்கட்டுவச்சி
மாலையிட்டநாள்முதலாய் மனதறிந்ததில்லையென்றாய்
கூரையிட்டநாள்முதலாய் குணமறிந்ததில்லையென்றாய்
கையிற்குழந்தையது வந்தவயணமென்ன
மடியிற்குழந்தையது வந்தவாறுசொல்லுமென்றாள்

அப்போமலைக்குறத்தி அருளிங்கிளியாளேதுசொல்வாள்

குறம்.

ஆயனருளாளன் அண்ணனடியம்மே
அரிவையந்தசீதையரும் நாத்தியடியம்மே
உலகளந்தமாலெங்கள் அண்ணனடியம்மே
உத்தமியாள்சீதையெங்கள் நாத்தியடியம்மே
உலகாளும்ராசகன்னி எனக்குசக்களத்தி
அவளைப்பெற்றசொக்கரெங்கள் தகப்பனடியம்மே
மாயவனைமைந்தன்வரம் வேண்டுமென்றுகேட்டால்
மகிழ்ந்துமெங்கள்ராமரல்லோ மைந்தன்வரம்தருவார்
மாயவனைமனந்தனிலே தினம்நினைப்போம்நாங்கள்
மாயவரேகுழந்தையாக மடிமீதிலிருப்பார்
பிள்ளையில்லாதெங்களுக்கு பிள்ளைவரம்தருவார்
பிள்ளைகலிதீர்க்கவல்ல பெருமான்யிவர்தாண்டி
மைந்தனில்லாஎங்களுக்கு மைந்தன்வரம்தருவார்
மைந்தன்கலிதீர்க்கவந்த மாயனிவர்தாண்டி
மந்திரத்தாலேந்துபிள்ளை உண்டோடிஎனக்கு
மகாதேவர்தந்தபிள்ளை யீசுரண்டியம்மே

வேறு.

குறத்தியுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
இந்தமாதுஉரைகேட்டு மயிலனையாளேதுசொல்வாள்
மைந்தன்பெறும்வகைகள் மயிலனையேசொல்லிவிட்டாய்
குழந்தைபெறும்வகைகள் கொம்பனையேசொல்லிவிட்டாய்
எங்கெந்தலோகமெல்லாம் கண்டுவந்தாய்கட்டுவச்சி
பார்த்துவந்தலோகமெல்லாம் பகரடிபூங்குறத்தி
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
பார்த்துவந்தலோகமெல்லாம் பைங்கொடியேசொல்லுறேன்கேள்

குறம் வேறு.

பூலோகம்புவலோகம் பார்த்துவந்தேனம்மே
புதுமையுள்ளசிவலோகம் பார்த்துவந்தேனம்மே
மேலானதெய்வலோகம் பார்த்துவந்தேனம்மே
மேன்மையுள்ளவைகுந்தம் கண்டுவந்தேனம்மே
சீரானசத்யலோகம் பார்த்துவந்தேனம்மே
செகம்புகழும்சூர்யலோகம் பார்த்துவந்தேனம்மே
மாலோகம்செனலோகம் பார்த்துவந்தேனம்மே
வரிசையுள்ளபிரமலோகம் கண்டுவந்தேனம்மே
நேரானதராதலங்கள் பார்த்துவந்தேனம்மே
நிட்சயமாய்குறிசொல்லும் குறத்தியடிநானும்

வேறு.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுசொல்வாள்

பதினாலுலோகமெல்லாம் பார்த்துவந்தேனென்றுசொன்னாய்
அந்தந்தலோகமெல்லாம் அறிந்துவந்தேனென்றுசொன்னாய்
கண்டுவந்தலோகத்திலே கனத்தகுறிசொன்னதுவும்
நீ சொன்னகுறிமெச்சி உச்சிதங்கள் தந்ததுவும்
வாங்கிவந்தபூஷணங்கள் மயிலேயேசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி அழகாகவேதுசொல்வாள்.
ஆனால்கேள்பெண்ணரசே அதிசயங்கள்சொல்லுகிறேன்.

குறம்-வேறு.

ஈசுரனார்பெற்றெடுத்த விக்கினராமவர்க்கு
வயர்வழிந்துமுகம்வேறு ஆகுதென்றுசொன்னேன்
இந்திரர்க்கும்வானவர்க்கும் மயிலவர்க்குமலவோ
இசைவாகநானுரைத்த குறிகள்மெத்தவுண்டு
ஈசுரர்க்கும்பிரமகத்தி யிருக்குதென்றுசொன்னேன்
இன்னமொருபெண்டுனக்கு வருவாளென்றுசொன்னேன்
என்குறிக்குமீசுரனார் மெச்சியல்லோயம்மே
இயலானமுத்துமாலை யீந்தாரடியம்மே
விக்கினரும்வேலவரும் எந்தனுக்குஅம்மே
வைடூரியகுறக்கூடை தந்தாரடியம்மே
இந்திரரும்வானவரும் மெச்சியல்லோஅம்மே
கல்லிழைத்தகணையாழி தந்தாரடியம்மே
விஷ்ணுவுக்குமிலட்சுமிக்கும் வேணகுறிசொன்னேன்
விதமாகயென்னை அவர் மெச்சிக்கொண்டுஅழைத்து
பட்சமுடனெந்தனுக்கு இலட்சுமியாள்தானும்
பாங்காமார்பதக்கம் தந்தாரடியம்மே

வேறு.

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்தியுறைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
குறம்பாடிபெற்றுவந்தாய் கோடானரத்தினங்கள்
உள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்றுவந்தாய்
பூங்குறத்தியெந்தனுக்கு புகழ்ந்துகுறிசொன்னையானால்
எந்தன்மனதுக்குறைகளெல்லாம் வகையாகச்சொன்னையானால்
உள்ளகுறியுரைத்தால் ரத்தினங்கள்தாரனடி
நல்லகுறியுரைத்தால் நாகரத்தினங்கள்தாரனடி
கொம்பனையேயெந்தனுக்கு குறியுரைத்தபிற்பாடு
குறக்கூடைதானிறைய கொட்டுகிறேன்ரத்தினங்கள்
ஒன்பதுரத்தினங்கள் வுத்தமியேதந்திடுவேன்
வச்சிரவைடூரியம் மாணிக்கந்தந்திடுவேன்
நீலப்பதக்கங்களும் நிறைந்தமுத்துதாவடமும்
பச்சைபதக்கங்களும் பருத்தமுத்துதாவடமும்

தாளிபதக்கங்களும் சன்னல்பின்னல்தாவடமும்
அத்தனையும்நான்தருவேன் ஆனகுறிசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவெச்சி
மாதுமுகம்நோக்கி மலைகுறத்தியேதுசொல்வாள்
தாளிபதக்கம்வேண்டேன் சன்னல்பின்னல்நான்வேண்டேன்
பச்சைபதக்கம்வேண்டேன் பருத்தமுத்துநான்வேண்டேன்
மாணிக்கம்வேண்டேன் மகரகண்டிநான்வேண்டேன்
உத்தமியேயுன்தயவால் மெத்தவுண்டுயெந்தனுக்கு
பேர்பெற்றயெங்கள் பெருமாள்தயவாலே
வெள்ளிமலைமேலே வேணதுண்டுயெங்களுக்கு
உன்கையில்தானிருக்கும் கற்பூரசம்பாவும்
செந்நெல்கொடுத்தையானால் சீராகயெந்தனுக்கு
அள்ளிக்கொடுத்தையானால் ஆனந்தவாழ்மார்பி
வறுத்துக்கொறித்திடுவேன் வையகத்தில்வாழ்ந்திடுவேன்
சென்னலதுகொடுத்தால் நல்லகுறியுரைப்பேன்
குறக்கூடைநெல்கொடுத்தால் குறியுரைப்பேனுந்தனுக்கு
மெல்லியாள்சொல்கேட்டு நல்லதென்றுசம்மதித்தாள்
அழகுசம்பாநான்தருவேன் ஆனகுறிசொல்லுமென்றாள்
நெல்லளந்துநான்தருவேன் நல்லகுறிசொல்லுமென்றாள்
அப்போதுகட்டுவெச்சி அதற்குமேசம்மதித்து
கொம்பனையாள்மாதருக்கு குறிசொல்லப்போனாள்காண்.

குறம்.

சாணியதுதானெடுத்து சதிருடனேமெழுகி
சட்டமுடன்பிள்ளையாரை பிடித்துமங்கேவைத்தார்
அருகுதும்பைகொன்றையது அவர்சிரசில்சாற்றி
அழகானகனிவகைகள் கொண்டுவந்துவைத்து
கிழங்குடன்வாழைப்பழம் தேங்காயுமுடைத்து
கிண்ணியிலேபாலமுர்தங் கொண்டுவந்துபடைத்தார்
பச்சரிசிதேங்காயும் பயருடனேபாலும்
இச்சையுடன்தான்படைத்து தீபதூபங்கொடுத்தார்
அருகுதும்பைகையிலெடுத்து அவர்சிரசில்சாற்றி
சுத்திவந்துகைதொழுது தெண்டனிடுமென்றாள்
சிந்தையிலேவுன்குறைகள் நீநினைந்து அம்மே
இந்தநல்லகணபதியை வந்துபணியென்றாள்
உங்கள்குலதெய்வங்களை வுகழ்ந்துநன்றாய்ப்போற்றும்
ஊன்வீட்டுபூவாடைக் காரிகளைநினைந்து
சிந்தையிலேதியானம்பண்ணி வந்தருளுமம்மே
திரமாகவுந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
எந்தன்குலதெய்வங்களை நானினைந்துஅம்மே
இகழாமலஉந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
செங்காபவாணியம்மாள் காளிகாதேவி

அங்காள்அம்மன்சத்தி அனைவோரும்வாருங்கள்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி
அலைகடலில்வாழுகின்ற கன்னிகளும்வாங்கள்
கைலாசவாசரு வேச்சலைநாதர்
காஞ்சியில்வாழ்யேகாம்பர காமாட்சி வாங்கள்
அண்ணாமலைநாதருமே வுண்ணாமலைத்தாயும
கொல்லாபுரியாளும்வந்து குறக்கூடைப்பமரும்
ஏழுருகன்னிகளும் எல்லைபிடாரிகளும்
எல்லவரும்வந்துமிந்த கூடைதனிலமரும்
ஈசரும்பார்வதியும் இருவருமாய்நீங்கள்
இன்பமுள்ளகுறக்கூடை வந்தமரவேணும்
அச்சுதரும்லட்சுமியும் ஆனந்தமாக
பட்சமுடன்குறக்கூடை தன்னில்வந்துஅமரும்
பிரம்மாவும்சரஸ்வதியும் புகழாகநீங்கள்
பெருமையுடன்குறக்கூடை வந்தமரவேணும்
தேவேந்திரரிந்திராணி சித்தர்கின்னரர்களும்
தெளிவானகுறக்கூடை தன்னில்வந்துஅமரும்
எங்கள்வள்ளிதெய்வானையம்மை யிருவர்களுமொன்றாய்
வேலவரும்வந்து குறக்கூடைதனிலவரும்
ஏழுமுனியிளையமுனி மன்னருசாமி
இவர்களெல்லாமொன்றாக குறக்கூடைதனிலமரும்
பச்சைமலைத்தாயாரும் பெரியபாளையத்தாளும்
பாவாடைராயனுமே வந்துமிகவமரும்
முப்பத்துக்கோடி தேவர்களுங்கூட
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியர்களுமேவொன்றாய்
அஷ்டதிக்குப்பாலர்களும் நவக்கிரகங்கள்கூட
அனைவோரும்வந்துமிந்த கூடைதனிலமரும்
அண்டரண்டதெய்வங்களை நினைத்துமந்தகுறத்தி
அழகுபெருந்திருவாட்கு யேதுகுறிசொல்வாள்
முந்திமுந்திவிநாயகனை தொழுவமடிநாங்கள்
முருகருடபாதமலர் என்னாளுமறவோம்
சத்திவிநாகனை தொழுவமடிநாங்கள்
சரஸ்வதியையனுதினமும் சிந்தையில்மறவோம்
ஆதிசிவன்மாயவரைப் பிரம்மாவைத்தொழுவோம்
ஆகாசதேவருடன் இந்திரரைமறவோம்

வேறு.

அப்போதுமலைகுறத்தி ஆரணங்கேதுசொல்வாள்
தேவாதிதேவர்களை நினைத்துமேஅப்போது
கொல்லாபுரத்தாளை நினைந்துகுறிசொல்லுகிறேன்

குறிசொல்வேன்வாடியம்மா வென்றாளேபூங்குறத்தி
அப்போபெருந்திருவாள் ஆரணங்கேதுசொல்வாள்
அப்படிக்கேநல்லதென்று ஆரணக்கும்வந்தமர்ந்தாள்
குறக்கூடைமுன்பாகக் குந்தினாள்நாயகமும்
மலைக்குறத்திகட்டுவச்சி வகையாகயேதுசொல்வாள்

குறம்.

முறமாய்நென்னல்கொண்டு மூன்றாகப்பகுந்து
உன், மனதிலெண்ணிக்கேட்டதெல்லாம் சொல்லுகிறேன்கேளு
உன்பேருபெருந்திருவாள் உடன்பிறந்தாள்சுபத்திரை
உன்கணவன்திரியோதிரன் உள்ளபடிதாண்டி
இலக்குமணர்க்குப்பூநால் கலியாணமென்றுசொல்லி
ஐவரையுமழைத்துவந்த துண்டோடிதாநீங்கள்
அவர்கள்வரும்வழிதனிலே வசிகளைநாட்டி
ஐவரையுங்கொல்லவென்று யெண்ணியிருந்தீர்கள்
ஆதியென்றகோபால கிருஷ்ணரிடதயவால்
அதுக்குந்தப்பிபிழைத்தார்களவர்களுமம்மே
மல்லர்களைவிட்டுமெல்லோ எண்ணைகளைதேய்த்து
மாளாதபஞ்சவரை கொல்லவென்றுநினைத்தீர்
ஏழுலகமாண்டதொரு யெம்பெருமாள்தயவால்
எம்பெருமாளருளாலே ஐவர்களும்பிழைத்தார்
குளிக்குமந்தகுளந்தன்னில் கூர்வசியைநாட்டி
கூசாமல்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அன்றுமிந்தசோர்தனிலே நஞ்சுமதைகலந்து
உயிருள்ளபாண்டவரை கொல்லத்துணிந்தீர்கள்
அப்போதுபீமராஜன் அவர்களுண்ணும்சோற்றை
அனைவருக்குமாகாதென்று தான்வாரிபொசித்தார்
வாரியுண்டசோற்றாலே மதிமயக்கமாகி
மன்னவர்மெய்மறந்து வைகுந்தஞ்சேர்ந்தார்
அப்பொழுதுநால்வருமே அரண்டுபுரண்டழுது
ஆயனல்லமாயவரை மிகநோக்கித்தொழுதார்
அப்பொழுதுமாயவரும ஐவர்களைக்காக்க
அத்திபுரம்வந்தாரடி ஜோகிவடிவாக
விஷக்கடிபாம்புக்கடி தீருதற்குமருந்து
வேணவிதமருந்தெடுத்து கூறிவந்தார்தெருவில்
கூறிவந்தசப்தமதை தருமரவரறிந்து
கொப்பெனவேதம்பிதனை யழையுமென்றுசொன்னார்
அப்போதுதம்பியவன் தானழைத்துவந்தான்
ஏனழைத்தீரென்றுசொல்லி ஜோகியவன்கேட்க
தம்பிதனையெழுப்புமென்று தர்மர்சொன்னாரப்போது

எழுப்பிவிட்டாலெந்தனுக்கு கொடுப்பதென்னவென்றார்
எந்தனது ஆஸ்திகளை உந்தனுக்குதருவேன்
அப்போதுஜோகியவன் மருந்தெடுத்துவுரைத்து
ஆயருட அருளாலே பிழைக்கவென்றுகொடுத்தான்
வைகுந்தம்போனவுயிர் வந்துபீமர்பிழைக்க
மந்திரங்கள் தந்திரங்கள் செய்தாண்டியம்மே
அவன்செய்தமந்திரத்தால் பிழைத்தாண்டி பீமன்
அலண்டுநித்திரைபோனவன்போல் பிரண்டெழுந்தான்பீமன்
செத்திருந்தவீமனுமே பிழைத்தெழுந்தான்பீமன்
திகிலெடுத்துமனங்கலங்கி திரியோதிரனழுதான்
மற்றுமொருவிதத்தாலே பஞ்சவரைக்கொல்ல
மனமகிழ்ந்துசகுனியுண்ட ஆலோசனைசெய்து
படுக்கிறபாய்தனிலே பாம்புகளைவிட்டு
பதைபதைக்கபாண்டவரை கொல்லத்துணிந்தீர்கள்
அதர்குந்தப்பிபிழைத்தார்கள் பாண்டவர்களம்மே
ஆயனார்மாயனிட உபாயமடியம்மே
வஞ்சனையாய்சூதாடி பாண்டவரையப்போ
மாளாதவிலங்குகளை மாட்டிவைத்தாரம்மே
பஞ்சவரைவஞ்சனைகள் செய்ததுபோதாமல்
பாஞ்சாலிதுரோபதையை பற்றியிழுத்தார்கள்
ஐவருக்குமுகந்ததொரு அபிஷேகப்பத்தினியும்
ஆரணங்குதுரோபதையை சபைதனிலேயிழுத்தார்
பற்றியிவர்தானிழுத்து பாவைதுகிலுரிந்து
பண்ணுதபங்கமெல்லாம் பண்ணிவைத்தார்சபையில்
கட்டழகிதுரோபதையாள் மனம்கலங்கியப்போ
கர்த்தரவர்மாயவரைக் கைதொழுதுநின்றாள்
ஆயரவர்மாயவனார் அறிந்தார்யிவள்துயரம
அட்சயமாய்துயில்வளர ஆயர்வரமளித்தார்
பத்தினியாள்துரோபதைக்கு மாளாததுகில்கள்
வளருதென்றுசபைதனிலே மெச்சிநின்றார்பெரியோர்
இப்படியாய்வஞ்சனைகள் செய்ததுண்டோஅம்மே
இன்னம்கொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேன்கேளு
அவருடையபங்குகளை யடங்கலுமேபரித்து
அரணமனையுமண்டபமு மிடிக்கஞாயமுண்டோ
அவருடையதேவிதன்னை அம்பலத்தில்நிறுத்தி
அவளைமிகவாய்பழுது சொன்னாரடியம்மே
உத்தமியைக்கொண்டுவந்து வுங்கள்சபைநிறுத்தி
உரியாததுகிலுரிந்த துண்டடிதாநீங்கள்
பத்தினியைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
பாங்கழியப்பேசினது வுன்புருஷனல்லோ
மாதுதனைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி

மனமழியப்பேசினது முண்டடிதாநீங்கள்
அப்பொழுதுதுரோபதையாள் தன்மனதில்யெண்ணி
அண்டாதசண்டாள ரென்றுமிகநொந்து
திரியோதிரன்முகம்பார்த்து தேவியவள்சொல்வாள்
தீராப்பெருஞ்சபதம் யிட்டாளந்தசபையில்
மொய்குழலாள்துரோபதையும் மூன்றிரண்டுபேரும்
முடிமன்னர்சபைதனிலே யிட்டார்பெருஞ்சபதம்
யிட்டபெருஞ்சபதத்தினால் திரியோதிரனொந்து
தன்மனதில்தானடுங்கி தகமையெடுத்துரைப்பான்
பனிரண்டுவருஷமட்டும் வனவாசந்திரிந்து
பதின்மூன்றும்வருஷமதில் மறைவாகயிருந்து
பதின்மூன்றுஞ்சென்றவுடன் பதினாலில்வந்து
பாரதத்தைத்தான்முடித்து பட்டமாளுமென்றான்
இத்தனைவஞ்சனைகள் செய்ததுண்டுநீங்கள்
அத்தனையும்பொறுத்துஐவர் போனார்வனவாசம்

வேறு,

நீங்களிந்தஞாயமெல்லாம் செய்ததுண்டோவென்றுரைத்தாள்
அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்தியுரைகேட்டு கொம்பனையாளேதுசொல்வாள்
வஞ்சனைகள்செய்ததுண்டோ மாயங்கள்மெத்தவுண்டு
பண்ணாதகோலமெல்லாம் பண்ணிவைத்தோமைவரையும்
வஞ்சனைகள்செய்ததுண்டு வனவாசம்போனதுண்டு
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
பதின்மூன்றுஞ்சென்றபின்பு பதினாலில்பஞ்சவர்கள்
பாரதமென்றுமவர் படையெடுத்துவருவாரோ
காடாண்டுபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
வருவாரோவாராரோ மற்றொன்றுஞ்சொல்லடிநீ
என்புருஷன்தானே யிவர்நாட்டையாள்வாரோ
பாரதம்வென்று படைபோகும்வேளையிலே
நாங்கள்கெலிப்பது வுநாடுநகராளுவதும்
அவர்கள்கெலிப்பதுவும் ஆராய்ந்துசொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி அரிவைய்நமேதுசொல்வாள்
நத்திவந்ததெய்வமோதான் வுற்றகுறியுரைக்க
பஞ்சவர்கள்தன்மனதை பார்த்துமிருந்தேனே
கட்டழகர்தன்மனதை கண்டுமிருந்தேனே
சாதகம்பொய்யாது தலைவிதியுந்தப்பாது
பிரமனெழுத்திதுதான் பிரளாதுவொருநாளும்
கர்த்தரிடகட்டளைகள் கடவாதொருநாளும்
கொல்லாபுரத்தாளை எண்ணியேயிப்பொழுது
சூதாடத்தையெல்லாஞ் சொல்லுகிறேன்கேளடிநீ

குறம்.

கூடை தனிலமர்ந்திருக்கும் கொல்லாபுரத்தாளே
கொம்மனேயாள்கேட்குங்குறி சொல்லவரமருளும்
இன்னமிவள்கேட்குங்குறி எல்லாநான்சொல்ல
எந்தனுக்குவரக்கருளும் என்றுமிகத்தொழுது
பெருந்திருவாள்முகம்நோக்கி போனகுறத்தி
பெருமையுள்ளஐவரது சேதிகளைசொல்வாள்
தர்மமேசெயமென்று போனுர்வனவாசம்
தர்மங்களைநினைப்பவர்க்கு தாட்டியுண்டோசொல்லும்
ஐவர்களும்ஐந்துருவு கொண்டுமல்லொவம்மே
அன்பானவிலாடபுரம் சேர்ந்தாரடியம்மை
இன்னமுந்தன்கணவன்படை சேனைகளைக்கூட்டி
இயலானவுயுத்தியங்கள் நடக்குமடியம்மே
உயுத்தியங்கள்நடக்கையிலே ரத்தக்கடலோடும்
மெத்தெனவேநானுரைத்தேன் சற்றேநீறுவாரும்

வேறு.

அப்போபெருந்திருவாள் அரிவையருமேதுசொல்வாள்
ஆனமலைக்குறத்தி அழகானகட்டுவச்சி
வர்னமலைகட்டுவச்சி வாக்குரைப்பாயெந்தனுக்கு
என்கணவன்ராச்சியத்தை யாண்டுமிருப்பானே
அத்திபுரபட்டணத்தையாள்வாரோ என்புருஷன்
ஒருத்தராயாள்வாரோ உத்தமியே என்புருஷன்
பங்காளிபஞ்சவர்கள் பாதினடாள்வாரோ
இன்னம்வருவாரோ எங்கள்தாயாதிகளும்
சாகாமலேபிழைத்துத் தரணிபதியாள்வாரோ
செத்துமடியாமல் செகதலத்தையாள்வாரோ
சண்டைபண்ணிநாடுநகரம தாமேகெலிப்பாரோ
மறுபடியும்வருவாரோ மன்னரந்தபஞ்சவர்கள்
எனக்குத்தெரியச்சொல்லு மேந்திழையேகட்டுவச்சி
அப்போமலைக்குறத்தி அழகாகஏதுசொல்வாள்

குறம்.

பார்சபைகளில்விரித்த கூந்தல்லடியம்மே
படுகளத்தில்முடிப்பேனென்று போனுள்வனவாசம்
உங்கள்சபைதனில்விரித்த கூந்தலடியம்மே
உயுத்தியத்தில்முடிப்பேனென்று போனுள்வனவாசம்
நானேநுத்தியல்லவோடி தலைவிரித்துநின்றேன்

இந்த-உலகமெல்லாந்தலைவிரித்து வாச்சுதென்றுபோனார்
வஞ்சனைகள்செய்தவொரு மன்னவரையெல்லாம்
இரணக்களத்தில்முடிப்பே னென்றுபோனாள்வனவாசம்
பத்தினியாள்விரித்தவொரு கூந்தலது அம்மே
பார்லோகம்விரிக்குமென்று போனாள்வனவாசம்
அருந்ததியாள்விரித்தவொரு கூந்தலல்லோ அம்மே
நாளை-அனைவர்களும்விரிப்பாரென்று போனாள்வனவாசம்
பதினெட்டாநாளையிலே படைபெருதும்சண்டை
பார்மன்னர்மார்மேலே முடிப்பாள்தலைகூந்தல்
நாகக்கணைகைபிடித்து நாடாளுமன்னன்
உன்-நாயகன்மார்மேலேறி முடிப்பாள்தலைகூந்தல்
அவனுடையவுதிரத்திலே அள்ளிதலைசீவி
அவனுடையமார்பெலும்பை சீப்பாகவுவந்து
பக்ககுடல்பதினாறும் பத்தினியாளெடுத்து
நாளை-படுகளத்தில்வாரிதலை முடிப்பாளே கூந்தல்
நூற்றொருவர்பூமுடியை நொருங்கடித்தபின்பு
வேற்றுமைகள்தொலைந்ததென்று வருவாள்பாஞ்சாலி
பங்சாளிதலைகளெல்லாம் பற்றறுத்தபின்பு
பத்தினியாள்தலைமுடித்துப் பாராளவருவாள்
அன்றேடேமுடியும் ஐவருடசபதம்
அரசாளவந்திடுவார் ஆரணங்கேகேளும்
இந்தமட்டும்சொன்னகுறி இனிபிசகாதம்மே
ஈஸ்பரனார்ஆணையென்று யிருந்தாளந்தகுறத்தி
கூடைதனில்சென்னலிது கொட்டலியோஅம்மே
பொம்பனையேஎன்மனைக்கு கொண்டுநாடப்பேன்
எட்டொருநாளாச்சுதடி யித்தெருவேவந்து
என்கணவன்பிரைதேடி யிங்கேவருவாண்டி
பத்தெருவும்என்னைத்தேடி வீட்டைவிட்டுவந்து
பத்தாவும்என்னைத்தேடி வருவாரடிபெண்ணே

வேறு,

என்றுமவளுரைக்க ஏதுசொல்வாள்பெருந்திருவாள்
குறத்திநீசொன்னதெல்லாம் கொற்றவர்க்கேநற்காலம்
மாதேநீசொன்னதெல்லாம் மயிலணைக்கேநற்காலம்
எங்களுக்குற்றக்குறி யொன்றுசொல்லலியே
மன்னவருக்குற்றக்குறி மயிலிணையேசொல்லலியே
பஞ்சவருக்காக வுரைத்தாயே பத்தினியே
காடாண்டபஞ்சவர்கள் நாடாண்டுவருவாரோ
ஐவரும்வந்துமல்லோ அரசாண்டிருப்பாரோ
நூலால்கடுந்திரளார் நூற்றொருவரானவரும்
இருந்தரசையாள்வாரோ எனக்குரையும்கட்டுவச்சி

நிட்சயமானகுறி நீயுரையுக்கட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியாளேதுசொல்வாள்
நான்சொன்னகுறிகளெல்லாம் செவிதனக்கு ஏறலியோ
பார்வதிக்குமீஸ்வரிககும் பகுந்துகுறியுரைத்தேன்
வேலவற்கும்வள்ளியற்கும் வேணகுறியுரைத்தேன்
இந்திரற்கும்தேவியற்கும் இசைந்துகுறியுரைத்தேன்
இராமருக்குஞ்சீதையற்கும் நல்லகுறியுரைத்தேன்
பிர்ம்மாசரஸ்வதிக்கும் வேண்டுகுறியுரைத்தேன்
அந்தந்ததேவரெல்லாம் அடுத்துமென்னைக்கேட்டதில்லை
இன்னமின்னம்சொல்லுமென்று ஏந்திழையேகேட்கிறாய்நீ
ஆனல்கேள்சொல்லுகிறே னரணங்குநாயகமே

குறம்,

நாகக்கொடிபன்னைபடைத்த நறுநுதலால்கேளாய்
உன்-நாயகராளுவதை சொல்லுகிறேன்கேளம்மே
நாலால்கடுந்திரளார் நூற்றொருவரம்மே
நுட்பமுடனரசாண்டு அற்பமதில்வாழ்வார்
பத்துதிங்கள்உண்டடியோ பாராளமன்னர்
பதினோராந்திங்களிலே படைமுகத்துமாள்வார்
எட்டிரண்டுந்திங்கள்மட்டும் யிருந்தரசையாள்வார்
இனியதொருதிங்களிலே யிறந்திடுவார்முடிகள்
பத்தினியார்சாபத்திலே பாரதம்போர்தன்னில்
பஞ்வர்கள்கையாலே மாண்டிடுவார்அம்மே
அருங்கிளியாள்சாபத்தினல் அரையர்களுமம்மே
ஐவருடகையாலே மாண்டிடுவார்சொன்னேன்
படுகளத்தில்மாண்டபின்பு கேளடிபெண்ணே
பஞ்சவர்களரசாள்வார் பார்முழுதுமல்லோ
அருங்கிளியாள்கூந்தல்தன்னை அங்கனவேமுடித்து
ஐவருடன்வாழ்ந்திருப்பாள் ஆரணங்கேகேளு
என்றுமிந்தகுறத்திசொல்ல இளங்கொடியாள்கேட்டு
இடிவிழுந்தாப்போல்முழுதும் ஏங்கியழுதாளே

வேறு.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமும்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதாள்
ஆர்கடகக்கையாலே அறைந்துகொண்டுதானழுதாள்
மோதிரக்கையை முகத்திலறைந்துகொண் . ால்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தானழுக
அங்குவொருகாதி அறிவுடையாளோடிவந்து

கொப்புத்திருத்தியல்லோ கோர்வைமிகத்திருத்தி
வளையலது திருத்தி வாளிமிகத்திருத்தி
பூணாரரேசகத்தை புத்திமிகத்திருத்தி
ஆறவிடுமென்றுசொல்லி அவளெழுந்துபோய்நடந்தாள்
கட்டார்கருங்குழவாள் காந்தாரிமுன்னேவந்து
செம்பொனதிரைநீக்கிச் சிக்கெனவேதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
காந்தாரிநாயகிக்கு கன்னியருமேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறத்தியங்கேவந்ததுவும் குறிகள்உரைத்ததுவும்
கானக்குறத்தியங்கே கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளப்போகிறதும்
மன்னர்பஞ்சபாண்டவரும் வையத்தையாளுவதும்
காஞ்சிநாடாளும் கருணரிங்கேமாளுவதும்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்மாளுவதும்
பாஞ்சாலன்பெற்றகன்னி பத்தினியாள்துரோபதையாள்
கொற்றார்குழலியவள் கூந்தல்முடிப்பதுவும்
அத்தனையுஞ்சொல்லி வுரைத்தாளந்தகட்டுவச்சி
பேடைமயிற்கண்ணாள் பெருத்திருவாள்தான்கேட்டு
ஆனந்தமாரி அழுதுபடுத்தாள்காண்
அந்தவிசேஷ அறிக்கையிடவந்தேனென்றாள்
கட்டார்கருங்குழலி காந்தாரித்தான்கேட்டு
குறியுரைக்கவந்ததொரு கொம்பனையாள்கட்டுவச்சி
குறிசொல்லிப்போனாளோ கொம்பனேநீசொல்லுமென்றாள்
அங்கேயிருக்காளோ ஆரணங்கேசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறிகளுரைத்து யிருக்கின்றாள்பைங்கொடியும்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்றாள்
குருடனிடதேவி கொம்பனையுந்தான்கேட்டு
அவள் ஆங்காரக்கோபமுடனடித்தேயெழுதிருந்து
தாதிமுகம்நோக்கி தையலுமேனுசொல்வாள்
தேசத்தையாளும் திரியோதிரதுக்கு
சொல்லிநீவாடியென்று மெல்லிநடக்கலுற்றாள்
அறிக்கையிட்டுவாருமென்று ஆரணங்குவாராளே

அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்மாளிசென்றது
மருமகளைத்தான் பார்த்து மகராசியேதுசொல்வாள்
ஏன்காண்மருமகளே யித்தவிதியுனக்கு
இவளார்காண்கட்டுவச்சி அடவாயுரைத்தவள்தான்
எங்கிருந்தெங்கேவந்தாய் யிந்தக்குறியுரைக்க
என்றுமவளுரைக்க யேதுசொல்வாள்கட்டுவச்சி

குறம்.

ஆதிசிவனோடிருந்து வந்தேனடியம்மே
அத்திபுரம்குறியுரைக்க அழகாகவந்தேன்
கொச்சிமலைகுடியிருக்கும் குறத்தியடிநாங்கள்
குமரேசர்வள்ளியற்கு குறியுரைப்போம்நாங்கள்
பச்சைமலைகுடியிருக்கும் குறத்தியடிநாங்கள்
பரமசிவனுமையவட்குங் கைபார்க்குகுன்றத்தி
மலையாளந்தேடி மகிழ்ந்துகுறிசொன்னேன்
வளமானசொன்னதெல்லாம் வாங்கிவந்தேனம்மா
அல்லியுடசீமையிலே ஆனகுறம்சொன்னேன்
அல்லியவள்மனமகிழ்ந்து நெல்லுமள்ளியிட்டாள்
வம்பருக்குந்தும்பருக்கும் வாய்த்தகுறிசொன்னேன்
கம்பெனக்குஅள்ளியிட்டார் கட்டழகியம்மே
ஆறுயிரம்பாண்டியற்கு அழகுகுறிசொன்னேன்
சீரானகேழ்வரகைத் திறமுடனேயளித்தார்
இந்நாட்டுக்குறியுரைக்க யிங்கேவந்தயிடத்தில்
எந்தனுக்குப்பெருந்திருவாள் யென்னகொடுப்பாளோ

வேறு.

இப்படியாய்ச்சொல்லி யிருக்கின்றாள் கட்டுவச்சி
கட்டார்குழலியரும் காந்தாரிதான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையாளேதுரைப்பாள்
முன்னேவுரைத்தகுறி சொல்லுங்காண்மொய்குழலே
என்-மருமகட்குச்சொன்னகுறி யெந்தனுக்குச்சொல்லுமென்றாள்
அப்போமலைக்குறத்தி யாரணங்கேதுசொல்வாள்
முறத்திலேசெந்நெல்கொண்டு வாருங்காண்மொய்குழலே
செந்நெலதுபறப்பி சொல்லுவோம்குறியுனக்கு

அப்போதுகாந்தாரி ஆரணங்கேதுசொல்வாள்
கொத்துசம்பாமுத்துசம்பா குடமல்லிச்சம்பாவும்
கொண்டுவந்துபொன்முறத்தில் கொட்டினார்குறத்திமுன்னே.
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குதான்பார்த்து

குறம்.

நெல்லையவள்கைபிடித்து நேர்ந்தகுறியென்பாள்
பொற்புடையபாஞ்சாலி புதுமைகுறிசொல்வாள்
முக்கணனார்தன்மகனே முன்னடத்தவேண்டும்
மூஷிகவாகனரே குறியுரையுமையா
விகடசக்ரகணபதியே வாக்கருளவேண்டும்
எங்கள்-வேலவரேவள்ளியரே வாக்கருளவேண்டும்
பச்சைமலைத்தாயாரே பாவைகுறியுரைப்பாய்
பரமசிவன்பார்வதியே பகர்ந்துகுறிசொல்லும்
அச்சுமலைகொச்சுமலை நடந்தகுறிசொல்லும்
நாராயணர்இலட்சுமியே நாவில்வந்துரையும்
தெய்வங்களைநினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பை
தேகமெல்லாம்நடுங்குதடி தேனமொழியேகேளும்
குறக்கூடைகுலுங்குதடி கொம்பனையேஅம்மே
கோலவிழிதுடிக்குதடி குறிகள்சொல்வேன்கேளும்
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேனம்மே
முத்துமுடிபாண்டியர்கள் அரசாளும்நாளில்
பத்தாண்டுசென்றபின்பு பாவையரேநீயும்
பார்மீதில்வளர்ந்து சமைந்தாயடிபெண்ணே
உந்தனுக்குகைபார்த்த சாஸ்திரமார்அம்மே
உனக்குசொன்னலட்சணங்க ளுண்மையென்றுசொல்வேன்
மண்டலத்தையாளுகிற மன்னர்களானாலும்
மகாதேவர்முதலான தேவர்களானாலும்
தெய்வபதியாளுகின்றதேவர்களானாலும்
தென்னிலங்கையாளுகின்ற ராட்சதரானாலும்
உன்னைத்தொட்டுமணம்புணர்ந்தா ருடனேயவர்மாள்வார்
என்றுரைத்தார்வேதியர்க ளிச்சபையிலம்மே
என்குறிகள்பொய்யோடி பின்னமுண்டுசொல்வேன்
அதுவறிந்துன்தகப்ப னுயாசப்பட்டு
அரசாண்டிருக்கையிலே அங்கேயொருநாளில்

அருகிருந்தமந்திரிகள் ஆலோசனைசெய்து
அரசனுடமுகம்நோக்கி அவர்களெடுத்துரைப்பார்
மன்னவனேநீர்கேளும் ஆலோசனையொன்று
மகளாரைமாலையிட மர்மம்சொல்லுகின்றோம்
மணமாலைப்பந்தலிட்டு மங்கையரைவைத்து
மன்னவரையாட்டுகிடா கொண்டுவந்துமல்லோ
ஆட்டுகிடாகைதனிலே மங்கிலியந்தந்து
ஆரணங்குகழுத்துதனில் தரியுமென்றாரப்போ
கிமிலியிந்தஅரசியற்கு நினைத்தகுறிசொல்வாள்
பொன்முற்றத்தைகைபிடித்து புதுமையிதுவென்பாள்
மங்கிலியந்தரித்ததொரு ஆட்டுக்கிடாமாண்டால்
மன்னர்வந்துமங்கையரை மாலையிடுவார்கள்
அந்தவுரைகேட்டு உன்தகப்பனம்மே
அப்படியேநல்லதென்று அவனுஞ்சம்மதித்தான்
பதிங்காதம்பந்தலிட்டு பாவையரையுனக்கு
பாங்கானகிடாக்கையில் தாலியதுதந்தார்
ஆட்டுக்கிடாவுன்கழுத்தில் தாலிகட்டியம்மே
ஆறுசுக்கலாய்வெடித்து அந்தக்கிடாமாள
அதுசமயந்தானறிந்து அந்தகனுமம்மே
ஆரணங்கையெந்தனுக்கு அருளுமென்றுகேட்டான்
அதுகேட்டுவுன்தகப்ப னல்லதென்றுசொல்லி
சதுரானகலியாணம் தானுமங்கேமுடித்தான்
மண்டலத்தையாளுமல்லோ யாண்டிருக்குநாளில்
மங்கையரேயுந்தனுக்கு மைந்தனில்லையென்று
நன்மையுண்டுசெல்வமுண்டு யிராச்சியங்களுண்டு
நாடாளமைந்தரில்லை யென்றிருந்தாயோடி
உன்-புருடனுடன்பிறந்த பாண்டுமகாராசன்
உம்மையுடனவர்மணந்த பத்தினியாள்குந்தி
குந்தியம்மாள்கற்பவதி யானுளென்றுநீயும்
கொள்ளாதவருத்தமுற்றாய் குபரியல்லவம்மே
அடங்காதகோபமுடனங்கொருநாளம்மே
ஆற்றங்கரைஸ்ரானம்பண்ணி அருங்கிளியாள்வாராள்
மின்னல்மின்னமழைபொழியும் வேளையது அம்மே
மெல்லியரேநீர்போய் பலாமரத்தைச்சேர்ந்தாய்
அதிலிருந்தரிஷியாரும் அணைந்தாரடியம்மே

அப்போதுசாபமது வுண்டாச்சுதுனக்கு
நூற்றெருமாதமது சென்றல்லோபிள்ளை
பெருவாயென்றுமேதான ரிஷியுனக்குரைத்தார்
அந்தவுரைகேட்டு அகமகிழ்ந்துவந்தாய்
அப்போதுன்னோரகத்தி ஐந்துபிள்ளைபெற்றாள்
ஓரகத்திபிள்ளை பெற்றாளென்றுசொல்லிநீயும்
உன்மனதுதாளாமல் வருத்தமுடனெழுந்து
எண்ணிவிசாரமுற்று யிருக்குமந்தநாளில்
ஏந்திழையாள்பிள்ளைகளைப் பார்த்துமல்லோநீயும்
ஆங்காரக்கோபத்துட னறைந்துகொண்டுநீயும்
அடிவயிற்றிலிடித்துக்கொண்டு அடித்துக்கொண்டழுதாய்
தொண்ணூறுதிங்களிலே தோகையரேநீயும்
முன்னேயொருகுழவிதனை யெடுத்துக்கொண்டாய்
அப்போதுபிண்டமது கலங்கியல்லோவந்தே
அழகானவுதிரமெல்லாம் வெளியாச்சுதம்மே
நூற்றெருகிண்ணியிலே நுட்பமுடன்பிடித்து
வேற்றுமைகளில்லாமல் வெளியானாரல்லோ
பொய்யோடியென்குறிகள் மெய்யோடிநீபுகலும்
பெருமையுள்ள அந்தகனார் மனுநீதியாலே
என்றுமந்தயிளங்குறத்தி தானுமங்கேநிற்க
இதுவறிந்துகாந்தாரி யெண்ணமிடுவகையும்.

வேறு.

இப்படியாக யிவர்களிருக்கையிலே
திரியோதிரன்சபைக்கு சென்றதொருதாதியர்கள்
தேசத்தையாளும் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றிரங்கிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
சீர்கடக்கையதனை சிரசின்மேல்தூக்கிநின்றாள்
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளும் திரியோதிரன்பார்த்து
நீ-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்திருபபணிதான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திழ்வாள்தாதியென்றாள்
நீயிங்கேவந்த தெனக்கறியக்கூறுமென்றான்
நாமக்கருங்குழலாள் தாதியருமேதுசொல்வாள்

அப்போதுதாதியரும் அழகாகவேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வாசலிலே
கட்டிவச்சிவந்ததுவும் கைபார்த்துசொன்னதுவும்
ஐவர்நகராளுவதும் அரசுமன்னர்மாளுவதும்
பஞ்சவர்கள்ஆளுவதும் பார்மன்னர்மாளுவதும்
பாஞ்சாலன்கன்னிதன்னைப் பதறித்துகிலுரிந்ததுவும்
அத்தனையுஞ்சொன்னாளே அழகானகட்டிவச்சி
அந்தவிரைகேட்டு அருங்கிளியுமாமியுமாய்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பெண்டுகளும்
அவர்-அங்கேதலைவிரித்து அழுதுபுலம்புவதும்
அத்தனையுஞ்சொல்லிமுடித்தாலவள்தாதி
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கென்றுமெய்கலங்கி
ஒன்றுமொழியாமல் உத்தமனும்வீற்றிருந்தான்
பாட்டனார்வீஷ்டுமரும் பாராளுந்துரோணரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளகாங்கயனும்
காஞ்சிநாடாளும் கருணனருந்தானறிந்து
நூலால்கடுந்திரளார் நூறுபேர்தம்பிகளும்
கானக்குறத்தியரை கட்டுவோமென்றுசொல்லி
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மாளாப்பெருவிலங்கு
பெருவிலங்குபோட்டார்கள் சிறையிலடைக்கவென்று
கன்னிபரைத்தான்பிடித்து கழுவிலிடுவோமென்று
அல்லவருங்கூடி அழகாகவாரார்கள்
அரண்மனையேழுகட்டு மந்தபுரந்தாண்டி
வீதியும்வீதி தெருவுபலதாண்டி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிசென்றார்
கானக்குறத்தியரை கண்டுமந்தமன்னரெல்லாம்
நீ-ஆர்காணுங்கட்டிவச்சி அறியவுரையுமென்றார்
எந்தவூருங்களது எவ்விடமோசொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டிவச்சி
மாநகரமாள்வதற்கு மாதரவளேதுசொல்வாள்

குறம்.

எந்தனதுதிருநாடு கேட்கிறையோதம்பி
ஏற்றவிடஞ்சொல்லுகிறேன் யாவர்களுங்கேளீர்

சந்திரர்கள் ஆளுவதும் எந்தன துநாடு
இந்திரனாராளுவதும் எந்தன துநாடு
ஈரேழுபதினாலும் எந்தன துநாடு
ஈஸ்வரனாராளுவதும் எந்தன துநாடு
சொக்கரவராளுவதும் எந்தன துநாடு
ஈஸ்வரியாளாளுவதும் எந்தன துநாடு
அண்ணாமலையாளுவதும் எந்தன துநாடு
வுண்ணாமலையாளுவதும் எந்தன துநாடு
கொலைகளவுமில்லாதார் எந்தன துநாடு
கோத்திரங்கள்சீர்தழைக்கும் எந்தன துநாடு
பொய்யுரையாளுவதும் எந்தன துநாடு
புண்ணியனார்வாசஞ்செய்யும் எந்தன துநாடு
முக்கிரைமுத்தளிக்கும் எந்தன துநாடு
புண்ணீனார்கள்தவம்புரியும் எந்தன துநாடு
கூடைதனில்கொம்பளக்கு எந்தன துநாடு
கொற்றவர்களாளுவதும் எந்தன துநாடு
வரன்முறைகள்தவராமல் எந்தன துநாடு
வானவர்களாளுவதும் எந்தன துநாடு

வேறு.

என்றுமவளுரைத்து நின்றாளேகட்டுவச்சி
நாட்டுவளப்பஞ்சொல்லி நாயகியாளங்கிருக்க
தேசத்தையாளும் திரியோதிரன் தான்கேட்டு
ஆனல்கேள்கட்டுவச்சி அடியேனொருவார்த்தை
கூடையில்முத்தளந்து கொட்டுவாரென்றுசொன்னாய்
முறத்தினில்முத்தளந்து மோருக்களிப்பேனென்றாய்
நீஎன்னகுறைவாகி வந்தீர்காணேந்திழையே
எதுகுறைவாகி இத்தெருவுவீதிவந்தாய்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மானகங்கொண்டவர்க்கு மங்கையருமேதுசொல்வாள்

குறம்.

மழைகளில்லைசென்னலில்லை மண்டலங்கள்தோறும்
மகாராசனனவர்க்கு வருத்தங்களுண்டாகி
சென்னலில்லைதூரலில்லை சீமையெங்குந்தம்பி
சிறப்பானவிளைவுமில்லை தேசங்க்ள்தன்முழுதும்
அத்திநகரரசாள்வீர் அரசர்களுண்டென்றாள்
அதுகேட்டுசென்னல்பிச்சை வாங்கவந்தேநானும்.

கொச்சைக்குறத்தி குறிகளிங்கேசொல்லி
குறம்பாடிசென்னல்பிச்சை வாங்கவந்தேனென்றாள்
சன்னசம்பாசின்னசம்பா சாதிலிங்கசம்பா
சதிரானகேழ்வரகும் வாங்கிவந்தேனென்றாள்

வேறு.

அந்தவுரைகேட்டு அரவக்கொடியோனும்
மாதுமுகம்நோக்கி மன்னவனுமேதுசொல்வான்
குறத்திமுகம்நோக்கி கொற்றவனுமேதுசொல்வான்
மானகரமாளும் மகாராசன்பெண்டுகெட்கு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கும்
என்-ஆச்சியற்குசொன்னகுறி அடியேனுக்குசொல்லுமென்றான்
யாவர்க்கும்சொன்னகுறி எனக்குவுரையுமென்றான
முன்னடந்தகாரியங்கள் மெல்லியரேநீயுரைத்து
இனிமேல்நடக்கும்வகை எனக்குநீசொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கூறுவாள்கொம்பனையாள் கோதுக்கிளிபோல
வாய்திறந்துதானுரைப்பாள் மாதுநல்லகட்டுவச்சி

குறம்.

நெல்விரையைதான்பரப்பி நேர்ந்தகுறிபென்பாள்
நீலகண்டநிமலியரே வாக்கருளவேண்டும்
காஞ்சிநகர்தனில்வாழும் காமாட்சியென்பாள்
காளையர்க்குகுறியுரைக்க வாக்கருளுமென்றாள்
உச்சிதமாய்நெல்லெடுத்து உண்ணாமலையென்பாள்
பச்சைமலைத்தாயாரே வாக்கருளுமென்றாள்
ஆயவரும்அலமேலும் மிக்கவேவந்து
விக்கினவேலவரை வேண்டிமிகத்தொழுது
மெய்யானகுறியுரைப்பாள் மெல்லியருமங்கே
வேழமுழுதாளுகின்ற திரியோதிரமன்னா
சிறப்பானகுறியுரைப்பேன் சிந்தைமகிழ்ந்தருளும்
அவனிமுழுதாளுகிற அரசர்சிகாமணியே
ஆனகுறியானுரைப்பேன் அரனருமறிய
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன்கேளும்
மேன்மையுள்ளராச்சியங்க ளாண்டுவருநாளில்
நித்திலங்குசூடிமுடியார் நிறைந்திருக்கும் சபையில்
நினைத்துகொண்டாய்மைந்தனுக்கு கலியாணஞ்செய்ய
மன்னர்களைதானழைத்து மருமங்களையுரைத்து
மகாராசர்சம்பந்தங்கள் வேண்டுமென்று நீரும
பாரளந்தான்தன்மகளை கொள்ளவென்றுநீரும்

பலத்ததொருசபைதனிலே எண்ணமிட்டார்நீரும்
அதுவறிந்துவுன்தகப்பனுகாதென்றுசொல்ல
அருவருந்தசகுனியவனுகுமென்றேயுரைத்தான்
மண்டலத்தையாளுகிற மன்னர்களேநீயும்
மாயன்பதிமிகநோக்கி வந்தீரல்லவென்று
ஆயருடசபைதனிலே அருகில்வந்துயிருந்து
கோபாலப்பெட்டிரொம்ப கொட்டுமென்றார்பணத்தை
கொற்றவனும்துக்கிசைந்து கொடுத்தார்வெகுபணத்தை
கொட்டிவந்தபொன்னையெல்லாம் கோபாலரெடுத்து
கொப்பெனவேபகராக்கி தூற்றிவிட்டார்காற்றில்
மறுபடியும்பொன்கொடுத்தால் பெண்கொடுப்பேனென்றார்
மனவமனமகிழ்ந்து மன்னர்களையனுப்பி
எஞ்சியத்துப்பொன்னையெல்லாம் கொண்டுவரச்சொல்லி
கரியமாலானவர்க்கு கணக்குடனேதந்தாய்
அதுவறிந்துசுந்தரியைத் தாரேனென்றுசொன்னார்
அடவாகமுகூர்த்தமிட்டு அனுப்பிவைத்தாருன்னை
அவநெட்டாநாளையிலே முகூர்த்தமென்றுசொல்ல
எம்பெருமாள்தானுரைக்க ஏகிவந்தீர்நீரும்
ஐன்பத்தாறுதேசத்துர்மன்னர்களும்வந்தார்
இலக்குணர்க்குமணக்கோலம் நன்றாகச்செய்து
நாடாளும்ராசாக்களும் நலமுடனேகூடி
மூன்றுநாளாகையிலே முடிமன்னரெல்லாம்
முத்துமுடிராசருடன் பயணமிட்டுவந்தீர்
ஐயனுடபதிநோக்கி அனைவோர்களும்வந்து
அதிருமர்தன்கொலுவி லிருக்குமந்தவேளை
அர்ச்சுனனீன்றெடுத்த அபிமன்னன்தானும்
அவனுடையதோழர்களும் அங்கனமேவந்து
மணவரையில்வீற்றிருந்த இலக்குணரையிழுத்து
மன்னர்சபைமுன்பாக மயிர்பிடித்துச்சிறைத்தார்
ஏந்துநல்லகுடுமிவிட்டு அவன்தலையைச்சிறைத்து
அரசாணிக்காலுடனே யிலக்குணனைக்கட்டி
மாயவரைப்பிடித்திழுத்து மரத்தோடேகட்டி
மன்னவரையுங்களைத்தான்மண்டைகொறுங்கடித்து
மாயன்மகள்சுந்தரிக்கு மணமாலைசூட்டி
மறுபடியுந்தன்பதிக்கு மன்னன்வந்துசேர்ந்தான்
அபிமன்னன்போனபின்பு அரசர்களேநீங்கள்
ஆயன்பதிவிட்டெழுந்து அபிமானங்குலைந்து
வாலபிமன்செய்ததினால் மானபங்கமாகி

மரியாதைதாழ்வாகி மண்டலத்தேவந்தீர்
பொய்யோதான்என்குறிகள் மெய்யோநீபுகலும்
பூமிமுழுதாளுகின்ற புண்ணியனேயென்றாள்
முன்னடந்தகாரியங்கள் இன்னமுண்டுசொன்னால்
முடியாதுபொழுதுமில்லை மன்னவரேகேளும்
முன்னடக்கும்காரியங்கல் எடுத்துரைப்பேன்கேளும்
ஈரேழுவுலகளந்த ஈஸ்வரனாரறிய
பஞ்சவரைக்கொண்டுவந்து பாரசபைநிறுத்தி
பங்கப்படுத்தியல்லோ பார்விலங்கைபோட்டீர்
ஐவர்களைசூதாடி யறைதனிலேயடைத்து
ஆரணங்கைகொண்டுவந்து அம்பலத்தில்நிறுத்தி
ஐவருடதேவிதன்னை அம்பலத்தில்நிறுத்தி
அனைவோருந்தாமறிய ஆடையுரிந்தீர்கள்
பத்தினியாள்மனதெரிய பாரசபைதனிலே
பரமசிவன்பார்வதியை சாட்சிவைத்தாளங்கே
மாதுநல்லாள்மனதெரிய மன்னர்சபைதனிலே
மாயவரைச்சீதையரை சாட்சிவைத்தாளங்கே
பொற்கொடியாள்மனதெரிய போர்மன்னர்சபையில்
பிரம்மாசரஸ்வதியை சாட்சிவைத்தாளங்கே
வேல்புருவங்கண்ணாளும் விரிந்ததலையுடனே
மீளாதசாபமிட்டு போனாள்வனவாசம்
மன்னாவுன்பூமுடியை மண்ணில்விழத்தறித்து
மயிர்முடிப்பேனென்றுசொல்லி போனாள்வனவாசம்
கொற்றவனேயுன்னுடைய குடலதனையெடுத்து
கொண்டையில்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
மன்னவனேயுன்னுதிரம் எண்ணெயென்றுதடவி
மயிர்கூந்தல்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
பன்னிரண்டுமோராண்டு சென்றவுடன்மன்னா
பாரதப்போர்முடிக்கையிலே பஞ்சவர்களைவர்
ஆயனொருசாரதியாய் அர்சுனன்தேரேறி
அரசமன்னர்பூமுடியை அடங்கலுமேதறித்து
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
நொடிப்பொழுதிலுன்முடியை தரையில்விழவடித்து
பீமனதுதெண்டாலே நீமடிந்தபிறகு
விபரீதப்பாரதப்போர் முடிந்ததென்றுசொன்னார்
பாஞ்சாலன்யெக்கியத்தில் வந்துதித்தகன்னி

படுகளங்கள்முழுமையுந்தான் பாஞ்சாலியறிந்து
பாவையருந்தன்கூந்தல் வாரிமுடிப்பாளே
கூந்தல்முடித்தானபின்பு கொற்றவர்களைவர்
கோடானயாகஞ்செய்து குவலயத்தையாள்வார்
கருணனுடமைந்தனவன் காளைவிஸ்வகேது
கனத்தநல்லமுடிசூட்ட அத்திபுரமாள்வான்
அங்கவளநாடனைத்தும் அவனாளப்போறான்
அவனியெல்லாம்பஞ்சவர்க ளாண்டுமிருப்பார்கள்
மன்னரிந்தபட்டணத்திலே யரசாளப்போறார்
மாளாதபெருநகரம் நீங்களுமேயாள்வீர்
ஐவரந்தபஞ்சவர்க ளரசாண்டுவாழ்வார்
அழியாதபெருநரகம் நீங்களுமேயாள்வீர்
என்றுமிந்தகட்டுவச்சி எடுத்துரைத்தாளங்கே
இதுகேட்டுதிரியோதிரன் யேங்கிமுகம்வாடி

வே று.

குறத்தியுரைகேட்டு கொற்றவனும்வேறுபட்டு
கட்டுவச்சிதானுரைக்க காளையதுகேட்டு
அவன்சிந்தைமனமகிழ்ந்து திடுக்கிட்டுமெய்மறந்து
மற்றுமொருநினைவாய் மன்னவனும்கோபமதாய்
கானக்குறத்தியல்ல கட்டுவச்சிதானுமல்ல
பஞ்சவரைமாலையிட்ட பாஞ்சாலியென்றறிந்து
ஐவரையுமாலையிட்ட அருங்கிளியாளென்றறிந்து
அங்குள்ளசேவகரை ஆணழகன்தானழைத்து
தூதுவரைத்தானழைத்து தொழுவிலங்குபோடுமென்றான்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
தூக்காவிலங்குமிட்டுத் தொழுவிலேபோடுமென்றான்
ஆரணங்குகுறத்தியரை அடையும்கிடங்கிலென்றான்
அப்போதுதூதுவர்கள் அங்கனவேயேதுசெய்தார்
கட்டழகிமாதினுக்கு கழட்டாவிலங்குமிட்டு
ஆரணங்குமாதரையு மறையிலேதள்ளிவந்து
சேர்விலங்குபூட்டியல்லோ சிறையில்வையுமென்று
மாளாவிலங்குமிட்டு மங்கையரைத்தானடைத்தார்
இப்படியாகயிவள் இங்கேயிருக்கையிலே
தோராவடிவழகி துரோபதையுமேதுசெய்தாள்

மாயவனைத்தானினைந்து மங்கைபுலம்புகிறாள்
கோவிந்தாவைகுந்தா கோபாலாவாருமென்றாள்
அம்பலத்துவாசலிலே அன்றுவந்துகாத்தீரே
அப்போதுகாத்தாப்போல் இப்போதுகாருமையா
எங்கள்குலதெய்வமே ஏகபரஞ்சுடரே
மன்னர்சபைநடுவே மானமதுகாத்தீரே
மானங்கொண்டவன்றன் மனையில்வந்துகாருமையா
ஆரணங்குயெந்தனையும் ஐவரிடஞ்சேருமையா
பாஞ்சாலியெந்தனையும் பஞ்சவரிடஞ்சேருமையா
ஆனையைக்காத்தாப்போ லடியாளைக்காருமையா
மைந்தனைக்காத்தாப்போ லாரணங்கைகாருமையா
என்றுபுலம்பி யிருக்கிறாள்துரோபதையும்
அந்தச்சமையமது அறிந்தாரேயெம்பெருமாள்

மாயன்பெருமாள் மனதில்நினைவாகி
தேசத்தையாளுந் திரியோதிரன்மாளிகையில்
மானங்கொண்ட மகாராசன்வாசலிலே
ஐவருடதேவி ஆரணங்குதுரோபதையாள்
குறமாதைபோலே கன்னிவடிவெடுத்து
சகாதேவராசனைத் தகுந்தகுழந்தையாக்கி
மைத்துனனானவனை மைந்தனுருவாக்கி
ஐவருடதேவி அபிஷேகபத்தினியாள்
குறத்திவடிவாகி கொம்பனையாள்வந்ததுவும்
கட்டுவச்சிபோலாகக் கன்னியங்கேவந்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கு
கைபார்த்துகட்டுவச்சிக் களக்குறிசொன்னதுவும்
முன்னடந்தகாரியங்கள் முழுமையுமுரைத்ததுவும்
இனிநடக்குங்காரியங்கள் யாவுமுரைத்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தானறிந்து
அழுதுபுலம்புவது யத்தையர்க்குச்சொன்னதுவும்
மண்டையுடைத்தழுது மாமியர்க்குச்சொன்னதுவும்
மாமியதுவறிந்து மாளிகைக்குவந்ததுவும்
குறத்தியவள்வாய்மொழியைக் கொம்பனையாள்கேட்டதுவும்
மயிலனையாள்தன்வார்த்தை மாமியவள்கேட்டதுவும்
மைந்தருக்குச்சொல்லி அனுப்பினதுமங்கெனவே

மானுக்கொண்ட மகனுககுரைத்ததுவும்
நாகக்கொடிபடைத்த ராஜனறிந்ததுவும்
குறத்திபருகில்வந்து குறியுரைக்கச்சொன்னதுவும்
இடும்பன்திரியனுக்கு இசைந்துகுறிசொன்னதுவும்
பாவிதிரியனுக்குப் பாவைகுறம்சொன்னதுவும்
கேட்டுயிடிவிழுந்து கீர்த்தியில்லாமன்னவனும்
அரும்பாவிசண்டாள னாலோசனைசெய்து
பஞ்சவர்கள்தேவியென்று பாவியறிந்துக்கொண்டு
ஐவருடதேவியென்று அரும்பாவிதானறிந்து
பாஞ்சாலன்கன்னியற்கு பாரவிலங்கிட்டதுவும்
அருங்கிளியாள்துரோபதையை அறையிலடைத்ததுவும்
அத்தனையுந்தாமறிந்து ஆடரெழுந்திருந்து
கைமோசம்வந்ததென்று கரியமாய்தானெழுந்து
துவாரகைவிட்டுமல்லோ சுவாமியங்கேவந்தாராம்
வேர்க்கவிரிவிரிக்க விலாடபுரத்தில்வந்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
எவருமறியாமல் இனியாருங்காணாமல்
இருவருக்குமுன்பிறந்த இளவிஜைபன்முன்னேவந்து
அருச்சுனனார்முன்னேவந்து ஆயருமேதுசொல்வார்
வாள்விசையன்முன்னேவந்து மதிமோசம்வந்ததுகாண்
அருச்சுனராசாவே அனர்த்தம்வந்துசேர்ந்ததுகாண்
வாள்விசையாமன்னவனே மதிமோசம்வந்ததுகாண்
கொன்றூர்குழலியாளை கொடியச்சிறையில்வைத்தான்
கால்விலங்குகைவிலங்கு இட்டுச்சிறையில்வைத்தான்
காவலுள்ளதுரோபதையைக் கடுகவழைக்கவேண்டும்
நீகொற்றவனார்வீரியனே குறவனைப்போல்வாருமென்றார்
அப்போதுவாள்விசையன் அரிராமர்தன்தயவால்
கொற்றவனார்வீரியருங் குறவேஷமானாரே
அணிபிள்ளையேகுத்தும் ஆண்மைக்குறவனனார்
கரடிபுலிகுத்தும் கன்னக்குறவனனார்
தட்டிவரிந்துகட்டி சல்லடமுமேற்பூண்டு
வில்லம்புகைபிடித்து வேந்தன்முதுகணிந்து
கருவேப்பிலையெடுத்துக் கடுகெனவேதோளிலிட்டு
சுண்டக்காய்வற்றலது சுக்கன்வற்றல்தானெடுத்து
காட்டுக்களாக்காயும் கடுகெனவேகைபிடித்து

குறவனைப்போலாயும் வாரானேகொற்றவனும்
கன்னக்குறவனைப்போல் வாரானேகாளையவன்
காடுசெடிதாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
அத்திபுரஞ்சேர்ந்தா னழலழகுமன்னன்
இராசமன்னர்வீதியிலே நடந்துவாரான்வாள்விசையன்
சிங்கியைக்காணாமல் தேர்விசையன்தேடிவந்தான்
குறத்திதனைக்காணாமல் குறவனவனதேடிவாரான்
அத்திபுரம்வீதியிலே ஆணழகனேதுசொல்வான்
சுண்டைக்காய்கொள்வீரோ சுக்கங்காய்கொள்வீரோ
காட்டுக்கிளாக்காய் கன்னியரேவேண்டுமோதான்
கிலுகிலுப்பைகொள்வீரோ கன்றுதும்புகொள்வீரோ
கொற்றவர்கள்வீதியிலே குறத்திதனைக்கண்டதுண்டோ
மன்னர்கள்வீதியிலே மங்கையரைக்கண்டதுண்டோ
மைந்தருமாதருமாய் மாறிவிட்டுவந்தார்கள்
எட்டுநாளாச்சுதையா யிளங்குறத்திவீடுவிட்டு
பத்துநாளாச்சுதையா பாவைநல்லாள்வீடுவிட்டு
கைலாயம்வீடுவிட்டு கடுகெனவேவீதிவந்தாள்
பிர்மலோகம்சுற்றியுரைத்து பெண்ணழகிவீடுவந்தாள்
வைகுந்தம்போயிருந்து வடிவழகிவீடுவந்தாள்
எமலோகம்போயிருந்து யிளங்கொடியாள்வீடுவந்தாள்
நாகலோகம்போயிருந்து நாயகியாள்வீடுவந்தாள்
ஐம்பத்தாறுதேசமும் அவளறியாநாடுமில்லை
அவள் எங்கெங்கேசென்றாலு மிளங்கொடியாள்வந்திடுவாள்
எட்டொருநாளாச்சுதல்லோ யென்னவளையாள்வீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதல்லோ பத்தினியாள்வீடுவந்து
ஏச்சுக்குயேச்சல்லோ யென்குலத்தார்தாமறிந்தால்
ஓரகத்திமச்சினிமார் வுதாசினங்கள்சொல்லிடுவார்
மாமியார்தானறிந்தால் மட்டுமருங்குவையார்
மாசில்லாவம்மிசத்தில் மருவுபடநாளாச்சு
ஆரணங்குதன்னாலே அழும்புவரநாளாச்சி
அழகுள்ளகன்னியென்று அடக்கிவசம்கொண்டார்கள்
வடிவுள்ளகன்னியென்று வையகத்தார்கொண்டுசென்றார்
மாயப்பொடிமருந்தை மயிலவளுக்குபோட்டார்கள்
சொக்குப்பொடிமருந்தை சுந்தரிக்குபோட்டார்களோ

மந்திரத்தால்தந்திரத்தால் மாதையழைத்தார்களோ
ஆண்மைவலுமையினு லடக்கிவசங்கொண்டார்கள்
என்றுசொல்லியக்குறவன் யெங்கேயழுதுவாருன்
நாலால்கடெந்திரளார் நூற்றொருவர்வீதியெல்லாம்
கன்னியரைத்தேடியல்லோ காளேயழுதுவாருன்
பேடைமயிர்கண்ணுள் பெருந்திருவாள்வீதியிலே
காட்டுக்குறவனவன் கத்திபுலம்புகிறுன்
குறத்தியைக்காணுமல் கூவியழுகிறுனே
வாடிப்புலம்புவதும் மட்டுமிதங்களில்லே
சொல்லிப்புலம்புவதும் செவிகேட்கமுடியவில்லே
அங்கிருக்குந்தாதியர்க ளணியிழையாரோர்டிவந்து
ஆர்காணும்நீகுறவா அழுதுபுலம்புவதேன்
எவர்காணும்நீகுறவா யிங்கேபுலம்புவதேன்
அழுதவயணமதை ஆரணங்குசொல்லுமென்ருள்
புலம்பும்வகையேது புண்ணியனேசொல்லுமென்ருள்
அப்போதுகுறவனவ னழகாகயேதுசொல்வான்

குறம்.

கன்னியெங்கள்கட்டுவெச்சி காளேகுறமுரைக்க
கண்டுவந்தவீதிகளில் குறமுரைக்கவந்தாள்
மாலேயிட்டநாள்முதலாய் யென்னேப்பிரிந்ததில்லே
மாதுநல்லாள்வீடுவந்து வாரமொன்றுமாச்சே
கூரையிட்டநாள்முதலாய்க் கொற்றவனேப்பிரியாள்
கொம்பனேயர்ள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
எட்டொருநாளாச்சுதம்மா என்வீடுவந்து
இளங்கொடியாளிருப்பிடந்தான் யெங்கேநானறியேன்
பத்தொருநாளாச்சுதம்மா பாவைமனேவந்து
என்-பத்தினியாளிருக்குமிடம் பாவியுநானறியேன்
கன்னியரைக்கண்டாலே கடுகெனவேயழைத்து
கலிராமர்தனனருளால் கடிகிமனேபோவேன்
உத்தமியேகண்டாலே வுடனேநானழைத்து
உம்பர்பிரான்தனனருளாள் வீடுபோய்ச்சேர்வேன்
கன்னியரைத்தேடுவது கலிராமரறிந்தால்
கனமோசம்வந்திடுமே யெங்கள்குலந்தனக்கு
பத்தினியைத்தேடுவது பரமசிவனறிந்தால்
பழிபாவம்வந்திடுமே யெங்கள்குலந்தனக்கு
மெல்லியரைத்தேடுவது வள்ளிவேலரறிந்தால்

வெகுமோசம்வந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
கொம்பனையாள்வீடுவர வில்லையென்றேயுரைத்தால்
குடிப்பழுதுமந்திடுமே குறக்கூட்டந்தனகது
எச்சானசாதியல்லோ யெங்கள்குறச்சாதி
ஏழானசாதியற்குங் கீழ்ச்சாதிநாங்கள்
காக்காய்கள்தின்போம் காட்டோணன்சுடுவோம்
கன்னியரைவிலைக்குவிற்று அமுதுபொசியோமே
மானைக்குத்திவிருந்திடுவோம் மாயக்குறச்சாதி
மனையாட்டிதன்னைவிற்று அமுதுபொசியோமே
ஏனந்தின்போம்மிருகந்தின்போம் யெங்கள்குறச்சாதி
எந்திழையைசோரவிட்டு அமுதுபொசியோமே
பாரப்புலிமிருகங்குத்தி பலத்தவிருந்திடுவோம்
பத்தினியைவிலைக்குவிற்று அன்னம்பொசியோமே
எந்தனுடகுறத்திதனை யாரழைத்தாரோடா
இழுத்தவரைக்கண்டாலே யிருதுண்டாய்பிளப்பேன்
கன்னிதனைத்தொட்டிழுத்த கள்ளரைக்கண்டால்
கண்டதுண்டமாய்தரிதது கனத்தவுயிர்வதைப்பேன்
அரண்மனையுமாஸ்தானம் அடங்கலும்நானிடித்து
அவனுடதேவிகளைக் கூடியணைந்திடுவேன்
கண்டேனேயாமாகில் கண்டதுண்டஞ்செய்வேன்
கன்னியரையழைத்துக்கொண்டு கடுகிமனைபோவேன்.

வேறு.

என்றுமவனுரைக்க யிளங்கொடிமார்தான்கேட்டு
கால்நடுங்கிகைநடுங்கி கடுகெனவேயோடிவந்து
மானகரமாளும் மகராசிதேவியற்கு
தெண்டனிட்டுதாதியர்கள் சீக்கிரமாயேதுசொல்வார்
வணங்கிநமஸ்கரித்து மாதருக்குசொல்வார்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
மயிலனையேயுன்னுடைய வாசற்படிகாத்திருந்தேன்
தேனின்குழலாளே தெருவாசல்கார்த்திருந்தேன்
அங்கேயொருகுறவன் அழுதுபுலம்பிவந்தான்
கட்டுவச்சிதன்னைத்தேடி கன்னக்குரவன்வந்தாண்
ஆரணங்கைக்காணமல் அழுதுபுலம்பிவந்தான்
மயிலனையைக்காணமல் மன்னன்புலம்பிவந்தான்
அழுதகுரல்கேட்டு ஆணழகாயெனன்வென்றோம்
மன்னா அழுதவகை வாய்திறந்துசொல்லுமென்றோம்

துரோபதைகுறம்.

அக்குறவன்தானுரைத்த வார்த்தையைக்கேளுமென்றார்
மலைக்குறவன்தானுரைதத வார்த்தையைக்கேளுமென்றார்
கட்டுவச்சிநாயகியை கைதொட்டுயிழுத்தவரை
குறத்தியைத்தானிழுத்து குகையிலடைத்தவரை
கண்டேனேயாமானால் கண்டதுண்டஞ்செய்வேனென்றான்
பார்த்தேனேயாமானால் பழுதுவருமென்றுரைத்தான
அத்திபுரத்தையெல்லாம் அடியோடிடிப்பேனென்றான
மகராசனபட்டணத்தை மண்ணோடேசாய்ப்பேனென்றான
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்ப்பேனென்றான்
ஆண்சிறையும்பெண்சிறையும் அவனைப்பிடிப்பேனென்றான்
ஆணாய்ப்பிறந்தவரை அடப்பம்பிடிக்கவைப்பேன்
மன்னர்களானாலும் மண்ணைப்பிளந்திடுவேன்
தேவர்களானாலும் சிதரடிப்பேனென்றுரைத்தான்
அந்தவுரைகேட்டு ஆச்சியரோசொல்லவந்தோம்
குறவனுரைத்ததெல்லாம் கொம்பனையேகூறவந்தோம்
என்றுமிகரைக்க யேதுசொல்வாள்பெருநதிருவாள்
மானகரமாளும் மகராசனானவற்கு
நீங்களுரையுமென்றார் நித்திலத்திலங்குபூமுடியார்
அந்தவுரைகேட்க அலங்காரத்தாதியர்கள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாளிகடந்து மன்னரிடவீதிவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றுமேதெண்டனிட்டாள்
நீ-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்ல வடியேன்திருப்பணிதான்
நீயிங்கேவந்த தெனக்கறியக்கூறுமென்றான்
தாதியவள்கைதொழுது தானங்கேயேதுசொல்வாள்
கால்விலங்குகைவிலங்கு கழட்டாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
விலங்கிட்டுமூலையில் வைத்திரேமெல்லியரை
கட்டுவச்சிதன்னையல்லோ காவலில்வைத்தீரோ
கட்டுவச்சிநாயகனார் கன்னக்குறவனவன்
பத்தினியைத்தேடியல்லோ பார்மன்னர்வீதிவந்தான்
பூங்குறத்திதன்கணவன் வந்தான்குறவனவன்
கன்னியரைத்தொட்டிழுத்து காவலிலேவைத்தவரை

பத்தினியைத்தொட்டிழுத்தும் பார்சிறைவைத்தவரை
கண்டோனேயாமானல் கண்டதுண்டஞ்செய்வேனென்ருன்
பார்த்தேனேயாமானல் பத்தியிழுப்பேனென்ருன
இந்திரனேயானலு மினிவிட்டமாட்டேனென்ருன
சந்திரனேயானலும் சற்றும்விடேனெனருன
தேவர்களானலும் சிதறப்பேனெனறுசொனனன்
அந்தவுரைகேட்டு அறிக்கையிட்வநதேனெனருன
தேசத்தையாளும் திரியோதிரனகேட்டு
எண்ணுதுமெண்ணியல்லோ யேங்கிமனந்தளர்ந்து
அருகிருக்குந்தோழனுக்கு ஆளனவவேதுசொவான
காஞ்கிநாடாளும் கர்ணர்பெருமாளே
குறத்திதனைததேடி வந்தானுங்குறவனவன
அந்தக்குறவனையு மடையுஞ்சிறையிலெனருன
சீர்பதத்தைமாற்றிச் சிறைவிலடையுமெனருன
காலவிலங்குகைவிலங்கு கழுட்டரப்பெருவிலங்கு
விலங்கிட்டுமனனவனை விடுகிடங்கில்போடுமெனருன
அந்தவுரைகேட்டு அங்குராயரோதுசொல்வார்
பீஷ்மர்முகம்நோக்கி வேந்தரெடுத்துரைப்பேர்
இனியெட்டுத்திங்களிலே யினியபோருண்டாக்கி
பாரதப்போர்தனில் படைகனனர்சேவகமும்
வாள்விசையனசண்டையிலே மனனவர்கள்சேவமுகம்
அர்ச்சுனனசண்டையில் அரசர்கள்தைரியமும்
பீமனுடனசண்டையிலே வில்வேந்தராண்மைகளும்
சகாதேவனசண்டையிலே சாமர்தியமுள்ளவனகாண்
வெளிப்பட்டநாளாச்சு வேந்தர்படைமுகத்தில்
இதற்குள்ளேயிங்கொருபேர் ரேனதேடிக்கொள்ளுகிறீர்
நாளைக்குப்போரு நடக்கவேதாமிருக்க
இப்போதும்போரு யெழுப்பவுமநியாயமுண்டோ
குறவனைத்தானபிடித்து கிடங்கிலடைப்பானேன
கிளையிலேலவாசம்பண்ணும் வனக்குறவரெல்லாரும்
இவனைச்சிறையில்வைத்தா லெவர்கள்முடிபோமோ
அத்தியுரமனைத்து மடங்கலுமண்ணுமோ
கோசவளநாடும் குமிறிதழும்பிடுமோ
பஞ்சவர்கள்கையாலே மாளுதற்குமுனபாக
குறவரிடகையாலே கொற்றவர்கள்மாளணுமா

வனக்குறவர்கையாலே மன்னர்கள்மாளணுமா
குவளயத்தைபாண்டமன்னர் குறவனாலேமாளணுமோ
வையகஙகளுள்ளளவும் மாருதபேராகி
சூரியதருள்ளவும் தொல்லுலகில்பேருகும்
குறியுரைக்கவந்ததொரு குறத்தியவள் தனையும்
தேடியழைக்கவந்த தெளிந்தகுறவனையும்
அனுப்பிவிடுமனுப்பிவிடும் அரசாளுமன்னர்களே
வறுத்தசென்னெல்கைகொடுத்து மங்கையரையனுப்பிவிடும்
சுட்டசென்னல்கைகொடுத்து தோகையரைப்போகவிடும்
பேமவிடுமென்றுசொல்லி பொற்கருணர்தாமுரைத்தார்
அழகுள்ளமன்னர் அரசர்களுந்தான்கேட்டு
கருணருரைத்தது காரியந்தரனென்றுசொன்னர்
தேசத்தழகன் திரியோதிரன்கேட்டு
அங்கிருக்குந்தூதுவரை அரசுமன்னர்தானழைத்து
சிறையிலடைத்துவைத்த அழகுகுறத்திதனை
கல்லறையிலுள்ளடைத்த மெல்லியளைவெளியேவிடும்
கனத்தசென்னல்கைகொடுத்து மாதனைப்போகவிடும்
சுட்டசென்னல்கைகொடுத்து தோகையரைக்கைபிடித்து
போகவிடும்போகவிடும் பொற்கொடியாள்நாயகத்தை
என்றவுரைகேட்டு யெழுந்தாரேதூதுவரும்
அரண்மனையெழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
குறத்யிருப்பிடத்தே வந்தார்கள்கெற்றவர்கள்
கட்டிவைத்தசென்னெல் வருத்துமேகைகொடுத்து
கொள்ளும்பறுமங்கே யெடுத்துவருத்தார்கள்
அத்தனையுங்கைபிடித்து ஆணழகர்வெளிவாரூர்
சுத்தியவர்கைபிடித்து தோகைமயிலனையாள்
இட்டவிலங்கை யிணைவிலங்கைதட்டிவிட்டார்
போட்டவிலங்குதனைப் பொட்டெனவேதட்டிவிட்டு
வறுத்தசெனனெல்கைகொடுத்து மங்கையரேபோகுமெனரூர்
கொடுத்ததொருசெனனெல்களை கொட்டினூர்கூடைதனில்
வாங்கிடக்கையிலே மயிலனையேதுசொல்வாள்.

குறம்.

இன்னமொருபத்துதிங்கள் சென்றபிறகல்லோ
இவர்கள்முடி பூமியிலே யிறக்கவுங்காளாச்சு

பத்தினியாள்சாபத்தினல் பாரமன்னர்நீங்கள்
பஞ்சவர்கள்கையாலே மாண்டுமடியப்போறீர்
அருங்கிளியாள்சாபத்தினல் அரசரெல்லாம்நீங்கள்
ஐவருடையகையாலே அனைவர்களுமாள போறீர்
என்றுசொல்லிகுறத்தியவள் யேகிவழிநடந்து
இளவிணையன்முன்னேவந்தாள் யிளங்குறத்திதானும்
அர்ச்சுனனைக்கண்டவுடன் அருங்கிளியாள்தானும்
ஆவலுடன்குறவர்முன்னே அருங்கிளியாள்சொல்வாள்
அத்திபுரவீதியிலே அருங்கிளியாள்வந்தேன்
அவ்வீதியரசரெல்லாம் அழைத்தாரல்லோபெண்டாய்
மண்மீதிலழிவீரென்று மன்னருக்குரைத்து
மற்றுமொருவீதியிலே குறம்பாடிவந்தேன்
குறம்பாடிவீதிவரக் கொம்பனைமார்கேட்டு
கொச்சைக்குறத்தியென்று பெண்ணையழைத்தாரரண்மனைக்கு
மகாராசன்தேவியராம் மயிலணையாள்தனக்கு
மங்கையவள்கேட்மல்லோ மயிர்விரித்தழுதாள்
அத்தையவள்காந்தாரி அருகாகவந்தாள்
அவர்தனக்குறியுரைத்தே னணழகாகேளும்
மாபாவிகேட்டுமந்த மைந்தனுக்குரைக்க
மண்ணாளுந்திரியோதிரன் வந்துகுறிகேட்டான்
அரசுமுடிமன்னனுக்கு ஆனகுறிசொன்னேன்
அவன்கேட்டுமன்னவனும் அடைத்தானேசிறையில்
கால்விளங்குகைவிலக்கு கனக்கவேதான்பூட்டி
காவிலேலவையுமென்றான் கள்ளனைப்போலென்னை
மன்னன்வைத்தகாவலிலே மயிலணையாளிருந்து
மாயவரைக்கைதொழுது மாதுவெளியானேன்

வேறு.

குறத்தியுரைத்ததெல்லாம் குறவன்கேட்டு
அரசாளுமன்னனுக்கு ஆண்மைகளுண்டானல்
அவனெற்றராயருடன் யெதிர்த்துப்போர்செய்யவேண்டும்
ஐவரையும்போலாகி வைத்தானேகாவலிலே
ஆரென்றுயெண்ணி யிருந்தானே ஆணழகன்
கள்ளித்திருடியைப்போல் கட்டவந்தகாரியமேன்
விலங்கிட்டமன்னவனை வெட்டித்தலைதுணிப்பேன்
காவலிலேவைத்தவனை கண்டதுண்டஞ்செய்திடுவேன்
ஐவருடகையாலே அடியோடேமாளுதற்கு
விலங்களாச்சுதென்று கட்டறக்கன்போகலுற்றான்

குறவனுங்குறத்தியவரும் கூடிவழிநடந்தார்
கட்டுவச்சிநாயகியும் கணவனுடனே
அத்திபுரந்தாண்டி அங்கவளநாடுவிட்டு
காடுசெடிதாணடிகரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அடர்ந்தவனந்தாண்டி
விராடநகரருகே வந்தாரிருவருமாய்
குறத்தியுருவருந்து கொம்பனையாள்போலேவாருள்
கட்டுவச்சிவேஷமாறி கன்னியருமங்கேவந்து
விராடத்தரசன்றன்னை வந்துமேவாழ்ந்துவந்தாள்
பணிப்பெண்ணைப்போலாக பாஞ்சாலியங்கிருக்க
காண்டாவனமெரித்த காளையருச்சுன்னும்
குறவனுருமாறிக் கொற்றவனுமவடிவெடுத்து
பேடியைப்போல் புகுந்தாணரண்மனையில்
தர்மரைக்கண்டுமவன் சாஷ்டாங்கதெண்டனிட்டு
பாஞ்சாலன்பெற்றதொரு பத்தினியாள்சென்றதுவும்
குறத்திவடிவெடுத்து கொம்பனையாள்சென்றதுவும்
அத்திபுரத்தாற்கு ஆனகுறஞ்சொன்னதும்
கபடன்திரியோதிரன் காவலிலேவைத்ததுவும்
அத்தனையுந்தானுரைத்து அருச்சுனன்போய்நடந்தான்
ஐவரு துரோபதையும் அங்கேயிருந்தார்கள்
மன்னவருந்தேவியரும் மகராசன்பட்டணத்தில்
சுகமாகவாழ்ந்திருந்தார் சுந்தரப்பூமுடியார்
இந்தக்கதைதன்னை யெழுதிப்படித்தவர்கள்
பாஞ்சாலிதன்குறத்தை பத்தியுடன்கேட்டவர்கள்
துரோபதைதன்குறத்தை துரிதமாய்ப்படிப்பவர்கள்
மாயனபெருமாளின் மகாதேவர்கிருபையினால்
நற்பதவிதானடைவர் நாட்டிலுள்ளயாவர்களும்
பெண்களுக்குப்போகமாய் பிரபலமாயிருக்குமென்று
கீர்த்திவிளங்கக் கிருபையுடனச்கிலிட்டார்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரூடி
மூங்கில்போல்சுற்றம் முசியமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்.

துரோபதைகுறம்

முற்றிற்று.

—(*)—